இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN


Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 149 | இதழ் : 16 | திகதி : 23.11.2025 | விலை : 50.00

# 'திரு அவையின் ஒற்றுமையின் அடையாளமாகப் பாடகர் குழுக்கள் திகழவேண்டும்'

## திருத்தந்தை லியோ வலியுறுத்தல்!



கிறிஸ்து அரசர் பெருவிழா அன்று பாடகர் குழுக்களின் யூபிலி நிகழ்வு, தூய பேதுரு பெருங்கோவிலில் கொண்டாடப்பட்டது. அப்போது, பாடகர் குழுவினரைச் சந்தித்த திருத்தந்தை, பாடகர் குழுக்கள் திரு அவையின் ஒற்றுமையின் அடையாளமாகத் திகழவேண்டும் எனவும், நம்பிக்கையில் ஒன்றாகப் பயணிக்கும் மக்களாக விளங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். மேலும், நம் வழிபாட்டு இசை ஒற்றுமையை வளர்க்க வேண்டும் எனவும் முழுத் திரு அவையும் முன்னோக்கிப் பயணிக்க உதவ வேண்டும்" எனவும் திருத்தந்தை வலியுறுத்தினார். திரு அவைக்குள் அன்பு, ஒற்றுமை மற்றும் ஒருங்கிணைந்த பிணைப்பைத் தங்கள் பணியின் மூலம் மீண்டும் கண்டுபிடிக்க வேண்டும் என்று பாடகர் குழுக்கள் மற்றும் இசைக்கலைஞர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். "பாடுவது நேசிப்பவர்களுக்குச் சொந் தமானது" என்ற புனித அகுஸ்தினாரின் வாக்கை நினைவு கூர்ந்த அவர், பாடுபவர்கள் அன்பையும் மென்மையையும், விருப்பத்தையும் மட்டுமல்லாமல், இதயங்களில் உள்ள வலிகளையும் வெளிப்படுத்துகிறார்கள் என்றும் தெரிவித்துள்ளார். வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாததை வெளிப்படுத்தும் மனித குலத்தின் பரிசு இசை என்று குறிப்பிட்ட திருத்தந்தை, திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் கிறிஸ்துவில் புதிய வாழ்க்கையின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் அருளின் பாடகர்களாகத் திகழவேண்டும் என்றும் பாடகர் குழு உறுப்பினர்களின் பணி, தயாரிப்பு, அர்ப்பணிப்பு, ஆகியவை உண்மையான பணி எனவும், எல்லாவற்றிற்கும் மேலாக, "அது ஓர் ஆழமான ஆன்மிக ப.2



## வடக்குக் கிழக்கு ஆயர்கள் மன்றக்கூட்டம்



யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மறைமாவட்டங்களின் ஆயர்களும், குருமுதல்வர்களும் அடங்கிய வடக்குக் கிழக்கு ஆயர் மன்றக்கூட்டம் கடந்த 12ஆம் திகதி வவுனியா திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் நடைபெற்றது. திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை நோயல் இம்மானுவேல் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இவ்வருடம் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் பற்றிய மீளாய்வும் வருகின்ற வருடத்துக்கான திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடலும் இடம்பெற்றன.

அதன் அடிப்படையில் கூட்டொருங்கியக்க மாநாட்டின் இறுதி ஆவணத்தின் தமிழ் மொழிபெயர்ப்பும், வேதாகமமும் மக்களுக்குக்கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டதுடன் வருகின்ற வருட தவக்காலத்தில் நான்கு மறைமாவட்டங்களையும் சேர்ந்த குருக்களுக்கான தவக்கால தியானமொன்றை மன்னார் மடுத் திருத்தலத்தில் நடத்துதல், நான்கு தமிழ் மறைமாவட்டங்களும் உள்ளடங்கிய உயர் மறைமாவட்டத்தை ஏற்படுத்தல், நமது பிரதேசங்களில் விசுவாசத்துக்காகத் தங்கள் உயிர்களை அர்ப்பணித்தவர்களை விசுவாச வீரர்களென அறிவிக்க வேண்டிய முயற்சிகளை முன்னெடுத்தல் போன்றவை தொடர்பாக கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இக்கூட்டத்தில் யாழ்ப்பாண, மன்னார், திருகோணமலை மறைமாவட்ட ஆயர்கள், மட்டக்களப்பு, மன்னார், யாழ்ப்பாண மறைமாவட்ட குருமுதல்வர்கள் கலந்துகொண்டனர்.

## திருச்சிலுவை சுகநல நிலையம் ஆரம்பிக்கப்பட்டதன் 43ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு



திருச்சிலுவைக் கன்னியர்களால் நடாத்தப்படும் திருச்சிலுவை சுகநல நிலையம் ஆரம்பிக்கப்பட்டதன் 43ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு கடந்த 17ஆம் திகதி நடைபெற்றது. சுகநல நிலையப் பொறுப்பாளர் அருட்சகோதரி அனுசலா அலெக்ஸாண்டர் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட அகவொளி குடும்பநல நிலைய இயக்குநர் அருட்தந்தை மனுவேற்பிள்ளை டேவிட் அவர்கள் விழாத் திருப்பலியைத் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். இந்நிகழ்வில் அருட்சகோதரிகள், தாதியர்கள், பணியாளர்களெனப் பலரும் கலந்துகொண்டனர்.

## கூழாமுறிப்புப் பங்கில் புனிதர்களின் படையெடுப்பு அணிவகுப்பு நிகழ்வு



கூழாமுறிப்புப் பங்கு மறைக்கல்வி மாணவர்கள், மறையாசிரியர்களும் முல்லைத்தீவு சிலாவத்தைப் பிரதேசத்தில் இயங்கும் கப்புச்சீன் அருட்தந்தையர்களின் Capital Campus மாணவர்களும் இணைத்து முன்னெடுத்த புனிதர்களின் படையெடுப்பு அணிவகுப்பு நிகழ்வு கடந்த 16 ஆம் திகதி நடைபெற்றது. கூழாமுறிப்பு பங்குத்தந்தை அருட்தந்தை கான்ஸ்போவர் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இப் படையெடுப்பு மாமூலை புனிதஅந்தோனியார் ஆலயத்திலிருந்து முள்ளியவளை புனித திரேசம்மாள் ஆலயத்தை சென்றடைந்து திருப்பலியுடன் நிறைவடைந்தது. மறைக்கல்வி மாணவர்கள் புனிதர்களைப்போல் உடையணிந்து படையெடுப்பில் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் 60 மாணவர்களும் 15 மறையாசிரியர்களும் பங்குபற்றியிருந்தனர்.

## அகவொளி குடும்ப நல நிலையத்தில் கற்கைநெறியை நிறைவுசெய்த மாணவர்களுக்கான பட்டமளிப்பு



யாழ். மறைமாவட்ட அகவொளி குடும்ப நல நிலையத்தால் முன்னெடுக்கப்பட்ட உள ஆற்றுப்படுத்தல் டிப்ளோமா கற்கைநெறியை நிறைவுசெய்த 10ஆவது அணி மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா கடந்த 15ஆம் திகதி நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. அகவொளி உதவி இயக்குநர் அருட்தந்தை அன்ரன் ஜெராட் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இயக்குநர் அருட்தந்தை மனுவேற்பிள்ளை டேவிட் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கற்கைநெறியை பூர்த்திசெய்த 13 மாணவர்கள் டிப்ளோமா சான்றிதழைப் பெற்றுக்கொண்டார்கள்.

யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் பிரதம விருந்தினராகவும் யாழ். மாவட்ட செயலக உதவி மாவட்ட செயலாளர் செல்வி தர்சினி உருத்திர கோடீஸ்வரன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் யாழ். பல்கலைக்கழக உளவியல் துறை சிரேஸ்ட விரிவுரையாளர் திருமதி. அபிராமி ராஜ்குமார் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து இந்நிகழ்வை சிறப்பித்தனர்.

## யாழ். புனித மடுத்தீனார் சிறிய குருமட வருடாந்தத் திருவிழா



யாழ். புனித மடுத்தீனார் சிறிய குருமட வருடாந்தத் திருவிழா குருமட அதிபர் அருட்தந்தை செல்வரட்ணம் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 09ஆம் திகதி நடைபெற்றது. திருவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள் ப.2

வெளிவந்துவிட்டது!

பாதுகாவலன்

திருவிவிலிய நாட்குறிப்பேடு

2026 ஆம் ஆண்டுக்கான திருப்பாடல்களுடன் கூடிய திருவிவிலிய நாட்குறிப்பேடு



பிரதி 600/- மட்டுமே!

வீட்டிற்கோர் நாட்குறிப்பேட்டினை வாங்கி இறைவார்த்தையில் வாழ்வோம்!

கிடைக்குமிடம்:

புனித வளன் கத்தோலிக்க அச்சகம்
360 பிரதான வீதி
யாழ்ப்பாணம்

பங்குத்தந்தையர்களூடாக உங்கள் பங்கிற்குத் தேவையான பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்

021 222 2378

# எமது எண்ணம்

## எம் பிள்ளைகளை ஊடக உலகிலிருந்து காப்போம்

இம் மாதம் ஆண்டின் இறுதி, பாடசாலை விடுமுறைக் காலமாகும். இக் காலத்தில் எமது இல்லங்களில் குழந்தைகள் எவ்வாறு தமது விடுமுறையைக் கழிக்கின்றனர் என அவதானித்தேன். அவர்களின் விடுமுறைப் பொழுது திரை நேரத்திலேயே (Screen Time) கூடுதலாக வீணாக்கப்படுவதை அவதானித்தேன்.

இலத்திரனியல் ஊடகத்தின் வளர்ச்சியும் பயன்பாடும் ஓர் உன்னதமான விடயமாக இருப்பினும் நாம் பயன்படுத்தும் முறை அழிவை நோக்கியதே! குறிப்பாக எம் பிள்ளைகள் அதனைப் பயன்படுத்தும் முறையானது அவர்களின் ஞான வாழ்வுக்கும் அறிவியல் வளர்ச்சிக்கும் கேடாகவுள்ளது.

எனவேதான் யாழ் மறைமாவட்டம் அடுத்த ஆண்டு 2026 “சமூகத் தொடர்பாடல்” ஆண்டாகப் பிரகடனம் செய்துள்ளது. எனவேதான் இவ் விடுமுறைக்கால சிறாரின் செயற்பாடுகளை அவதானித்து இத் தலையங்கத்தில் சில விடயங்களைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

தொலைக்காட்சி, கைபேசி, யூடியூப், கார்ட்டூன், விளையாட்டுத் தொடர்கள்... இவையெல்லாம் குழந்தைகளின் கனவுகளில் வண்ணமூட்டும் பூச்சிகளாய் பறக்கின்றன.

ஒரு காலத்தில் “ஆராரோ ஆரிவரோ“ என்ற பாடலைக் கேட்டுத் தூங்கிய குழந்தை, இன்று “சூப்பர் ஹீரோ” வாக மாறிப் பறக்க விரும்புகிறது. மின்னணு உலகின் மாயக் கைகளில் பிடிபட்ட சிறுவர்களின் சிரிப்பு மெதுவாக “லைக்ஸ்” மற்றும் “வியூஸ்” எனும் எண்களில் அளவிடப்படுகிறது.

அவர்களின் பொம்மைகள் திரை மீது மட்டும் மினுங்க, வெளி உலகத்தின் மண் வாசனை அவர்களைத் தொடாமல் போகிறது. சிறுவர் மனம் என்பது வெண்காகிதம் போன்றது. அதில் நாம் எழுதுவது வாழ்க்கை முழுக்க நிழலாகி நிற்கும். ஆனால், இன்று அந்தக் காகிதத்தில் ஊடகக் குறும்புகள் தீட்டியிருக்கும் ஓவியங்கள் சில நேரங்களில் நம் சமூகத்தின் சோகத்தையும் பிரதிபலிக்கின்றன. அதிக வன்முறை, ஆடம்பரம், போட்டி உணர்வு... இவையனைத்தும் கார்ட்டூன்களிலும் விளம்பரங்களிலும் சிறுவர்களை மயக்கி அவர்களின் இயல்பான வாழ்வைச் சிக்கலாக்குகின்றன.

மொபைல் ஒரு மாய உலகம். அதில் பறக்கிறது குழந்தை மனம். சந்தோஷம் “லைக்”கில் தேடுகிறது. அன்பு “ஷேர்”லே பரிமாறுகிறது. நிஜம் தொலைந்தது திரைத் தூசியில். கனவு மாறியது “கார்ட்டூன்” காட்சியில். ஆனால், ஒரு கதைப் புத்தகத்தின் வாசம் இன்னும் அவர்களை எழுப்ப முடியும்!

ஒரு சிறுவன் தனது நண்பனை மிஞ்சவேண்டும் என்பதற்காகப் போன் வாங்க ஆசைப்படுகிறான். ஒரு சிறுமி விளம்பரத்தில் காட்டும் பொம்மையைப் பெறவேண்டும் என அழுகிறாள். இவை சிறு சம்பவங்கள் அல்ல. இது ஊடகத்தின் மென்மையான அடிமைத்தனம். ஆனால், எல்லாமே இருண்டதல்ல. நல்ல ஊடகங்கள் கல்வி சார்ந்த நிகழ்ச்சிகள், குழந்தைச் சிறுகதைகள், சிறுவர் கலை நிகழ்ச்சிகள் இவையும் குழந்தைகளின் கற்பனைக்குச் சிறகாகும். சரியான வழிநடத்தலில் ஊடகம் ஓர் ஆசானாகவும், தவறான வழிநடத்தலில் அது ஒரு கல்நெஞ்சனாகவும் மாற்றிவிடும். அதனால் பெற்றோரும் ஆசிரியர்களும் விழிப்புடன் இருக்க வேண்டும். திரை நேரத்தை (Screen Time) சீராகக் கட்டுப்படுத்தி, பசுமையான விளையாட்டுகளும் புத்தக வாசிப்பும் குழந்தை உலகின் மூச்சாக மாறவேண்டும். காற்றில் பறக்கும் பட்டம்போல, குழந்தைகள் சுதந்திரமாக நம்பிக்கையுடன் வானில் பறக்கட்டும்.

குழந்தைகள் -அவர்கள் வெறும் எதிர்காலமல்ல:
அவர்கள் நம்முடைய இன்றைய மின்னல் ஒளி.
அந்த ஒளியைத் திரையின் குளிரில் மங்க விடாதீர்கள்.
அவர்களை இயற்கையின் ஒளியில்,
நம்முடைய புன்னகையிலும்,
அன்பின் அரவணைப்பிலும் வளர்த்திடுவோம்.

திரை வெளிச்சம் குழந்தைகளின் கண்களில் ஒளி வீசலாம் ஆனால், அன்பின் வெளிச்சம் அவர்களின் இதயத்தில் ஒளிரட்டும். அனைத்துத் திரைகளும் இருண்டவை அல்ல. சரியான நெறிமுறையில் சமூக ஊடகமும் ஒரு வழிகாட்டியே.

மீடியா ஒரு கருவிதான் அதை இசைக்கச் செய்வது நாம்தான். நாளைய உலகம் இன்றைய குழந்தைகளின் கண்களில் எழுதப்படுகிறது. அந்தக் கண்களில் திரை ஒளி அல்ல. அன்பின் ஒளி பிரதிபலிக்கட்டும். நம்முடைய அரவணைப்பும் நெறிப்படுத்தலும்தான் அவர்களின் உண்மையான பாதுகாப்புக் கேடயம். திரை ஒரு நிழல் அது விளையாட்டைக் காட்டும் ஆனால், வாழ்க்கையைக் கற்பிக்காது. எனவே எம் குழந்தைகளை ஊடக உலகில் இருந்து காப்பாற்றுவோம்.

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

## நம் ஆயரை வாழ்த்துகின்றோம்





**ஆயராக பத்தாவது வருடத்தில்...**

**நயந்தோம் வாழ்க நம் ஆயர் ஆண்டகையே!**
**ஞானப் பிரகாசமாய் காலத்தில் ஒளிர்வதால்**
**ஆன்மீகம், அறிவியல், அரசியல், பல்துறையும்**
**ஞானக் கண்கொண்டு நோக்கும் உம் வீச்சு**
**பரிமாணங்கள் பலவற்றை**
**யாழ் திருஅவை காண**
**கான மழையாக பொழிகிறதே!**
**நனைகிறதே யாழ் மறை மண்**
**நல்லாயன் என்பதற்கு பொருள்கோடல் வேண்டின்**
**ஆயர் உம் தடங்கள் பதில் சொல்லும் பாங்குறவே!**
**பேராளுமை என்பதற்கு பெயர் சொல்ல வேண்டின்**
**பேரருட்கலாநிதி உம்மை நோக்கிச் சுட்டுவிரல்கள் அசையுமே**
**தொட்ட உம் பணி தொடுவானமாய் தொடரவே**
**மரியன்னை வழி இறையருள்வேண்டி**
**இனிதே வாழ்த்துகின்றோம்.**



**பாதுகாவலன் வாசக நெஞ்சங்கள்**

# முழங்காவில் புனித மரியன்னை ஆலயத்தில் இடம்பெற்ற மறைக்கல்விக் கண்காட்சி

கடந்த 16.11.2025 ஞாயிறு காலை 7.30மணித் திருப்பலியைத் தொடர்ந்து மறையாசிரியர் திருமதி டொனிசியா குயின்மேரி தலைமையில் இடம்பெற்ற இக்கண்காட்சியை அருட்தந்தை செலஸ்ரின் அமதி நாடா வெட்டித் தொடக்கி வைத்தார். பங்குத்தந்தையின் நெறிப்படுத்தலிலும் மறைக் கல்விப் பொறுப்பாளர் டொன்பொஸ்கோ சபை அருட்சகோதரி மேரி அவர்களின் வழிகாட்டலிலும் பெற்றோர் மறையாசிரியர்களின் ஒத்துழைப்புடன் ஆண்டு 1 - O/L வரையான மாணவர்கள் முன்னெடுத்திருந்தனர். திருப்பலியின் மகத்துவம், திருவருளடையாளங்களின் செயற்பாடு, புனிதர்களின் வரலாறு, திருச்செபமாலையின் பலன்கள், திருவிவிலிய நூல்களின் பாரம்பரியங்கள் மற்றும் நற்செய்திகளின்படி இயேசுவின் புதுமைகள், உவமைகள், பாடுகள், மரணம் உயிர்ப்பு என்பவை காட்சிப்படுத்தப்பட்டன. விசேட விடயமாக ஒவ்வொன்றிற்கும் பிள்ளைகள் வழங்கிய ஆழமான விளக்கங்கள் பெற்றோரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியதோடு பார்வையாளர்களையும் கவர்ந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# துயர் பகிர்கின்றோம்

யாழ் மறைமாவட்டக் குருவும், யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபருமான அருட்பணி **A.P.** திருமகன் அடிகளாரின் அன்புத் தாயார் **அன்ரன் பீற்றர் சகாயகொன்சி** 15.11.2025 அன்று காலமானார். அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிப்பதோடு. அருட்தந்தை அவர்களுக்கும், குடும்பத்தாருக்கும் எமது அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

## திரு. அவையின் ஒற்றுமையின்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்க்கை” என்றும் குறிப்பிட்ட திருத்தந்தை, அவர்கள் பாடுவதன் மூலம் மற்றவர்கள் செபிக்க உதவுகிறார்கள் என்றும் பாராட்டினார்.


“வழிபாட்டு இசையை ஒரு நிகழ்ச்சியாக மாற்றுவதை எச்சரித்துள்ள திருத்தத்தை, ”பாடகர் குழுவலிகளையும் வெளிப்படுத்துகிறார்கள் என்றும் வழிபாட்டில் ஒரு சமூகத்தின் அங்கமாக இருக்கிறார்கள் ஆகவே,ஆடம்பரங்களைத் தவிர்த்து அது ஒற்றுமையை வளர்க்கக் கூடியதாக இருக்கவேண்டும் என்றும் முடியாததை வெளிப்படுத்தும் மனிதகுலத்தின் கேட்டுக் கொண்டுள்ளார்.

## யாழ். புனித மடுத்தீனார்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமை தாங்கி ஒப்புக் கொடுத்தார். திருப்பலியைத் தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. கலைநிகழ்வில் குருமட மாணவர்களின் படைப்பான “தேன் அரும்பு” கையெழுத்து நூலின் 17ஆவது இதழ் ஆயர் அவர்களால் வெளியிட்டுவைக்கப்பட்டதுடன் இதழுக்கான மதிப்பீட்டுரையை திருமறைக்கலாமன்ற பிரதி இயக்குனரும் யாழ்ப்பாண கல்வி வலய நாடகமும் அரங்கியலும் பாடா ஆசிரிய ஆலோசகருமான திரு. ஜோன்சன் ராஜ்குமார் அவர்களால் வழங்கப்பட்டு, வருடாந்த அறிக்கையும் வாசிக்கப்பட்டது. இந்நாளை சிறப்பிக்கும் முகமாக விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வுகளில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம், குருமட மாணவர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதர்கள், ஆசிரியர்களெனப் பலரும் கலந்துகொண்டனர். இக்குருமடம் யாழ். மறைமாவட்டத்தின் இதயமாகத் திகழ்வதுடன் 156 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# 09.11.2025 அருளும் மகிமையும் நிறைந்த நாள்



**இறையடியான்**
**வண. அ. தோமஸ் அமதி அவர்களை வணக்கத்துடன் நினைவுகூரும் நாள்**
**நம்பிக்கையின், பாரம்பரியத்தின், தெய்வீக ஊக்கத்தின் புனித விழா**

**நீதிமானின் நினைவு**
**ஆசீர்வாதமாகும்**
**நீதி மொழிகள் 10:7**

இன்றைய நாள் உலகத் திருஅவை முழுவதும் புனித ஒற்றுமையில் ஒன்றிணைந்து ஒரு புனித ஆன்மாவின் வாழ்வை நினைவுகூரும் நாள். இறையடியான் வ.அ.தோமஸ், அமதி அவரின் வாழ்வு கிறிஸ்துவின் ஒளியை ஒளிரச் செய்தது. அந்த ஒளி நம் பாதையை வழிநடத்துகிறது.

மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஒருமுறை பகர்ந்த நெஞ்சார்ந்த வார்த்தைகளோடு, நாங்கள் நன்றி நிறைந்த மகிழ்ச்சியுடன் நம் இதயங்களை உயர்த்துகின்றோம். இறைவனுக்கே புகழ் உண்டாவதாக. 9.11.2025 அன்று யாழ் மறை மாவட்டத்திற்கு ஒரு ஆனந்த நாளாகவும், இலங்கை மற்றும் இந்தியாவின் செபமாலைத்தாசர். செபமா-லைக்கன்னியர். சபைகளுக்கு இரட்டிப்பான ஆசீர்வாதம் நிறைந்த நாளாகவும் அமைந்துள்ளது.

நாம் அனைவரும் எம் அன்பு நிறுவுனரின் ஆன்மீக செல்வங்களை, பாரம்பரியங்களை அன்புடன் தொடர் கின்றோம்.

பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம் என்னும் இந்த மண்ணில் பிறந்து அமலமரித்தியாகிகள் சபையின் வழியில் வளர்ந்து இறைநம்பிக்கையின், பணிவின், அர்ப்பணிப்பின் ஒளிவிளக்காக, செபமனிதனாக, வேற்றுமைகளைக் களைந்தவராகத் திகழ்கின்றார் எம் ஞானத் தந்தை இறையடியான் வ.அ.தோமஸ்.அமதி அவர்கள்.

இவர் ஈழத்துக் கத்தோலிக்க திருஅவையின் ஓர் ஆன்மீக ஞானி. தோலகட்டி மௌன முனிவர். ஆசியாவின் அதிசயம். இந்தியப் பெருங்கடலின் முத்து. இவர் வாழும்போதே வாழும் புனிதர் என அழைக்கப்பட்டார். இவர் தமது வாழ்வை திருப்பலி, நற்கருணை ஆராதனையும் செபமாலையை தியானம் நிறைந்த ஒரு புனித இசையாக மாற்றினார். இருளின் ஆட்சியை அகற்றிக் கிறிஸ்துவின் ஆட்சியை நிலைநிறுத்தும் போரில் பகலும் இரவும் ஈடுபட்டார். இதையே இன்றும் செபமாலைத் துறவிகளாகிய நாம் தொடர்கின்றோம். நாமும் நினைவு கூர்வோம். ஆண்டவர் அவரை புனிதர்களின் வரிசையில் ஏற்கட்டும்.

இறைவன் முன்னிலையில் நான் யார்? இறைவன் யார்? என்ற இவ் அறிதலில் தெளிவான பார்வை கொண்டவர். தூயஆவியானவரின் தனிப்பட்ட வழி நடாத் துதலுக்கான உள் உணர்வு பெற்றிருந்தார். தன்நலமறுப்பும், தாழ்ச்சியும், இறைவனில் குழந்தைக்குரிய நம்பிக்கையையும் கொண்டிருந்தார்.


அவரின் ஒளிரும் வாழ்வு நம் இதயங்களை ஊக்குவிக்கட்டும். புதிய அழைப்புக்களை வலுப்படுத்தட்டும்.நம்மைத் தெய்வீக அன்பிற்கு மேலும் மேலும் அழைத்துச் செல்லட்டும்.

இனிதே வாழ்த்தி இன்றும் என்றும் அவரின் வழிகாட்டுதல், அவரின் ஆழமிகு மௌன வாழ்வு எம்மையும், தலத்திருச் சபையையும் இறைவனிடம் இட்டுச்செல்ல செபிக்கின்றோம், வாழ்த்துகின்றோம். எம் அன்புத் தந்தை இறைஅடியான் தோமஸ், அமதி புனிதர்கள் வரிசையில் இணைக்கப் படுவாராக, மகிமைப்படுத்தப்படுவாராக. ஆன்மீகக் குருட்டாட்டத்தில் மூழ்கிக் கொண்டிருக்கும் இன்றைய திருஅவையின்

ஈழத்துக் கத்தோலிக்க
திருஅவையின்
ஓர் ஆன்மீக ஞானி.
தோலகட்டி மௌன முனிவர்.
ஆசியாவின் அதிசயம்.
இந்திய பெருங்கடலின் முத்து.
இவர் வாழும்போதே
வாழும் புனிதர் என அழைக்கப்பட்டார்.

இறை மக்களுக்கு எம் தந்தையின் வாழ்வு ஒரு மேல்வரிச்சட்டமாக அமையும் எனலாம். இவருடைய ஆழ்தியான செப தப, பரிகார வாழ்வும், தன்னலமற்ற மேலான பணிகளும் வெளிச்சத்திற்கு வருவதோடு, இன்றைய, நாளைய தலைமுறை யினர் இவரைப்பற்றி அறிவதற்கு ஏதுவாக அமையும் என்று நம்பலாம். தந்தையின் இனிய நினைவில் மகிழும்

**செபமாலைச் சகோதரிகள்.**
**தோமா ஆச்சிரமம்,**
**பாண்டியன்தாழ்வு,**
**யாழ்ப்பாணம்.**



# காலங்கள் கடந்த முடிசூட்டு விழா

**வ**ழிபாட்டு ஆண்டின் சிகர மாகவும், அதன் மகுடமாகவும் விளங்கு வது மாட்சிமிகு கிறிஸ்து அரசர் பெரு விழா. இத்திருநாள் ஒரு சாதாரண கொண் டாட்டம் அல்ல. இது காலத்தைக் கடந்து நிற்கும் ஓர் அரசரின் நிலையான ஆட்சிப் பிரகடனமாகும்.

இந்த விழா 1925-ஆம் ஆண்டு திருத்தந்தை பதினோராம் பயஸ் அவர் களால் “Quas Primas“ என்ற சுற்று மடலின் மூலம் நிறுவப்பட்டது. உலகப் போர்கள் மற்றும் மதச்சார்பின்மையின் எழுச்சியால் உலகெங்கும் குழப்பமும் அநீதியும் கோலோச்சிய காலத்தில், உலகிற்கு உண்மையான அமைதியை யும் நீதியையும் வழங்கக்கூடிய ஒரே அரசர் இயேசுக் கிறிஸ்து மட்டுமே என்ற அடிப்படை உண்மையை உலகிற்கு உரக்கக்கூறும் கட்டாயம் திரு அவைக்கு ஏற்பட்டது. கிறிஸ்துவை நம் வாழ்வின் மையத்தில், சமூகத்தின் மையத்தில் மீண்டும் நிலைநாட்டவே இத்திருநாள் நிலைபெற்றது.

**திருவிழாவின் முக்கியத்துவம்**

இந்த விழாவானது ஆண்டின் கடைசி ஞாயிற்றுக்கிழமையில் கொண் டாடப்படுவதற்குக் காரணம், நமது நம் பிக்கைப் பயணத்தின் இறுதி இலக்கை வரலாற்றின் முடிவில் கிறிஸ்து இயேசு எப்படி எல்லாவற்றிற்கும் முடிசூட்டப் பட்ட அரசராக வருவார் என்பதையும் நமக்கு நினைவூட்டி, நாம் அனைவரும் நமது நம்பிக்கை வாழ்க்கையின் விளைவு-களைச் சிந்தித்து, மீண்டும் ஒரு புதிய நம்பிக்கைப் பயணத்தைத் தொடங்க ஆயத்தமாவதற்கு இத்திரு நாள் ஆண்டின் முடிவில் கொண்டாடப் படுகிறது. நாம் இன்று கேட்கவேண்டிய கேள்வி: “நம் உள்ளங்களில், நம் குடும்பங்களில், நம் சமூகத்தில் கிறிஸ்து உண்மையிலேயே அரசராக ஆட்சி செய்கிறாரா? இல்லையேல், நாம் அவருக்குச் சிம்மாசனத்தை அமைத்துக் கொடுக்க மறுக்கிறோமா?”

கிறிஸ்துவின் அரச மேன்மை என்பது ஒரு புதிய கருத்து அல்ல. இது யூதர்களின் நம்பிக்கையின் ஆணி வேராக இருந்தது. மேலும், இறைவாக் கினர்கள் மூலமாகப் பல நூற் றாண்டுகளுக்கு முன்பே முன்னறிவிக்கப் பட்டது. கடவுள் தாவீது அரசருக்கு, ”உன் அரியணை என்றும் நிலைத்திருக்கும்” (2சாமு 7:16) என்று வாக்குறுதி அளித்தார், அந்த வாக்குறுதி தாவீதின் வழித்தோன்ற லாக வரவிருந்த நிலையான அரசராகிய கிறிஸ்துவில் தான் முழுமை பெறுகிறது. ”இதோ! ஓர் அரசர் நேர்மையுடன் அரசாள் வார் தலைவர்களும் நீதியுடன் ஆட்சி செய்வார்கள்” (எசா 32:1). இயேசு நீதியின் அரசராகவும் அமைதியின் அரசராகவும் வருவதை எசாயா தீர்க்கத்தரி சியும் தெளிவாக முன்னறிவித்தார் (எசா 9:6).

**புதிய ஏற்பாட்டின் பிரகடனம்**

கபிரியேல் வானதூதர் அன்னை மரியா விடம், ”அவர் பெரியவராயிருப்பார் உன்னத கடவுளின் மகன் எனப்படுவார் அவர் தம் தந்தையாகிய தாவீதின் அரியணையை அவ ருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் வீட் டின் மீது என்றென்றும் ஆட்சி செய்வார்” (லூக் 1:32-33) என்று அறிவித்தார். இது இயேசுவின் அரச மேன்மையை அவர் கரு விலிருக்கும்போதே உறுதிசெய்கிறது.இயேசு தமது போதனைகள் அனைத்திலும் “விண்ணரசு“ அல்லது “கடவுளின் அரசு“ பற்றியே அதிகம் பேசினார். மலைப்பொழிவு, உவமைகள் அனைத்தும் அந்த அரசின் மதிப் பீடுகளையும் சட்டங்களையும் வெளிப்படுத்தின. அவர் எருசலேமுக்குள் ஒரு கழுதையின் மீது பவனி வந்த போது, மக்கள் ”தாவீதின் மக னுக்கு ஓசன்னா! ஆண்டவரின் பெயரால் வருகிறவர் ஆசீர்வதிக்கப்பட்டவர்! இஸ்ரா யேலின் அரசர்!” என்று ஆர்ப்பரித்தனர். (மத் 21:9 - யோவா 12:13).

கிறிஸ்துவின் அரச மேன்மை என் பது தற்காலிகமானதல்ல. அது காலம் கடந்த ஒரு நிலையான உண்மை! உலக அரசர் களின் ஆட்சிக் கோட்டைகள், படை பலங்கள், ஆடம்பரமான உடைகள் ஆகியவற்றால் பிரகாசிக்கிறது. ஆனால், கிறிஸ்து அரசர் தமது அரியணையைச் சிலுவையிலும், தமது கிரீடத்தை முள் முடியிலும், தமது அரச உடை மையைப் பிறரின் ஏளனமான பேச்சிலும் கண்டார். இதுவே கிறிஸ்துவின் ஆட்சியின் மிகப்பெரிய முரண்பாடாகும்.

**கிறிஸ்து அரசின் பண்புகள்**

கிறிஸ்துவின் அரசு ஒரு போதும் நிலையற்றதல்ல. காலத்திற்குத் தகுந்தபடி மாறும் கோட்பாடுகளைக் கொண்டதும் அல்ல.அதன் அடிப்படைகள் நிலையானவை. இயேசுவின் மலைப்பொழிவே இந்த அரசின் அரசியலமைப்புச் சட்டமாகும். இயேசுவே ”வழியும் உண்மையும் வாழ்வும்...” (யோவா 14:6) என்று அறி விக்கிறார். அவருடைய அரசு பொய், கபடம், தந்திரம் ஆகியவற்றின் மீது கட்டப்படவில்லை. அது உண்மை மீது நிறுவப்பட்டிருக்கிறது.

“முதலில் அவரது அரசையும் அவரது நீதியையும் தேடுங்கள்” (மத் 6:33),கிறிஸ்துவின் அரசு என்பதுசமத் துவத்தின் அரசாகும். இங்கு பணக் காரன் - ஏழை, ஆள்பவர் ஆளப்படு-பவர் என்ற வேறுபாடுகள் இல்லை. ஒவ்வொரு மனிதனும் கடவுளின் சாய லாக உருவாக்கப்பட்டு, சம மதிப்புடை யவனாக மதிக்கப்படுகிறான். சமூக அநீதிகளைக் களைவதும், பாதிக்கப் பட்டோருக்கு நீதி வழங்குவதும் இந்த அரசின் அடிப்படை விதியாகும். கிறிஸ்து வின் அரசின் மிக உயர்ந்த மற்றும் மிக முக்கியமான குணம் அன்பு. ”நீங் கள் ஒருவரை ஒருவர் அன்பு செய்யுங் கள் நான் உங்களை அன்பு செய்தது போல நீங்களும் ஒருவர் ஒருவரை அன்பு செய்ய வேண்டும்” (யோவா 13:34) என்பதே அரசின் முதன்மைக் கட்டளை. இந்த அன்பு நிபந்தனைக ளற்றது. எதிரிகளை மன்னிப்பதும், பகைவருக்கு நன்மை செய்வதும், அநீதி இழைத்தவர்களுக்காகச் செபிப் பதும் இந்த அன்பின் வெளிப்பாடுகளே.

இந்த உலகம் தரும் அமைதி நிரந்தரமற்றது. ஆனால், கிறிஸ்து தரும் அமைதி நிலைத்திருப்பது.“நான் உங்களுக்கு அமைதியைக் கொடுத்துச் செல்கிறேன்: என் அமைதியையே உங்களுக்குக் கொடுக்கிறேன்” (யோவா 14:27). இந்த அமைதி புறச்சூழ்நிலைகளைப் பொறுத்தது அல்ல. அது கடவுளோடு மனிதன் கொண்டுள்ள உள்ளுறவின் விளை வாகும். உன் அமைதி, உன் குடும்ப அமைதி, உலக அமைதி என்பதே இந்த அரசின் செயற்பாட்டுத் தந்திரமாகும்.

*(தொடர்ச்சி 4ம் பக்.)*

**மேதகு முனைவர் ஸ்ரீபன்**
**தூத்துக்குடி மறைமாவட்டம்**



ஆயர் ஸ்ரீபன்

# கல்லறைக் காவியம்

**இறப்பும் சோகமும்**

பிறப்பு மகிழ்வான செய்தி! இறப்போ துக்கச் செய்தி! நமக்குத் தெரியும், பிறப்பவர் கண்டிப்பாக இறந்தாக வேண்டும் என்று பிறப்பின் முடிவு இறப்பிலுள்ளது. அப்படியென்றால், இறப்பு பிறப்பின் மகுடம்தானே! மகுடம் சூட்டும் நாளை மகிழ்வான நாளாகக் கொண்டாடுவதுதானே இயல்பு! அப்படியெனில், இறப்பில் நம்மில் பலர் அழுகிறோம், புலம்புகி றோம், ஏன் ஒப்பாரி வைக்கின்றோம்? இறப்பு அன்பை முறித்துவிடுவதாலா? ஏன், இறப்பிற்குப் பின்பும் நீ அன்பு செய்யலாமே! ஒருவேளை இறந்தவரைக் காண முடியாது. அவரோடு பேச முடியாது, அவரின்றிக் குடும்பம் பொருளாதாரத்தில் சிதைந்துவிடும், அவரின்றி மறுபடியும் தலை தூக்குவது கடினம் என்ற நினைவுகள் நம்மை வருத்தத்தில் ஆழ்த்துவதாலா?

மனித இயல்பில் இறந்தவர் மாயமானவர் போலாகிறார். அவரில்லாது தலை தூக்குவது கடினம். அதிலும் கணவன் இளம் வயதில் இறந்துவிடின், மனைவி "விதவை" எனக் கணிக்கப்படுவதும், அது அவளுக்கு வந்த சாபம் எனக் கூறுவதும், பூவும் பொட்டும் வைக்க அனுமதி மறுப்பதும் நம் சமூகம் செய்யும் அபத்தம், பல நல்ல நிகழ்வுகளில் அவர்கள் அழைக்கப்படுவதில்லை. அவர்கள் பிரசன்னமே அபசகுனமாகக் கருதப்படுகிறது. இறப்புத் தரும் வேதனைகள் சொல்லிலடங்கா!

இன்னும் ஒருசிலரது இறப்பு நல்லதாகப் பார்க்கப்படுகிறது. பல குடும்பங்களில் அப்பா - குடிகார மனிதன், அடித்துத் தொல்லை தருகின்ற மனிதன் இறந்துவிட்டான் என்று ஆறுதல் அடைகிறது. சமுதாயமும் இம்மனிதன் தொல்லை எனக்கூறித் தம்மைச் சமாதானப்படுத்திக் கொள்கிறது.

**இறப்பு விடுதலையா?**

ஆனால், இறப்பு சாபமா? அல்லது இழப்பா? அல்லது சோகமா? வாழ்வின் இரு பாகங்கள்தான் பிறப்பும் இறப்பும். ஒளியில் மட்டுமல்ல, இருளிலும் நன்மையுண்டு. மகிழ்வில் மட்டுமல்ல. துன்பத்திலும் நன்மையுண்டு. உடல் நலனில் மட்டுமல்ல, நோயிலும் நன்மை உண்டு. உண்மையில் துன்பத்திலிருந்துதான் பல பாடங்களைக் கற்றுக்கொள்கிறோம். நோயுறும்போதுதான் அயலாரின் நோயின் கனாகனம் தெரியும். நாம் அவரைப் புரிந்துகொள்ள நல்ல தருணம் அதுதான். ஒளி நல்லது. ஆனால், இருள் நல்லதல்ல என்று யார் கூறியது? "இருளிலிருந்து ஒளிக்கும்" எனும்போது இருளைத் துயரத்திற்கும். ஒளியைத் துயரத்திலிருந்து பெறுகின்ற விடுதலைக்கும் ஒப்பிடுகிறோம்.

**இருளின் பொருள்**

பகலில் பார்க்க முடியாத நிலவை இருளில் பார்க்கிறோம். அவ்வாறே விண்மீன்களைப் பார்க்கிறோம். இரவில் நிசப்தமான அந்தப் பொழுதில் எழுதுகிறோம். சிந்திக்கிறோம், நிம்மதியாகத் தூங்குகிறோம். இருளில் பயணம் செய்து காலையில் வேலைக்குப் போகிறோம். இரவில்தான் பலவற்றைக் கண்டுபிடிக்கிறோம்.

இயேசுவும் துன்பங்கள் பற்றியும், பாடுகள் பற்றியும், அவரது இறப்புப் பற்றியும் முன்மொழிகின்றார். இறப்பு மீட்பின் சாரமாகவும், பாவங்களை மன்னிக்கும் ஆற்றல் உடையதாகவும் காண்கின்றார் (மாற் 8:31). பேதுரு இந்தக் கருத்தையும் சிந்தனைகளையும் ஒத்துக்கொள்வதில்லை. அவர் இயேசுவைத் தனியே அழைத்து அவரைக் கடிந்து கொள்ளத் தொடங்கினார். இயேசு, "என் பின்னாலே போ, சாத்தானே! நீ கடவுளுக்கு ஏற்புடையதை எண்ணாமல் மனிதருக்கு ஏற்றவற்றைப் பற்றியே சிந்திக்கிறாய்" என்று கடிந்துகொண்டார் (மாற் 8:32- 33 : மத் 16:21-28 லூக்கா 9:22-23).

தவறு செய்யும் மனிதன் முழுவதும் தீயவனல்ல அவன் மனம் திரும்பிப் புனிதனாகலாம். தீமை என்று நாம் கருதும் பல நன்மைத்தனத்திற்கு வாய்க்காலாக அமைகின்றன. நீதிமானிலும் கறையுண்டு. பாவியிலும் நன்மைத்தனம் உண்டு. இரண்டும் கலந்ததுதான் மனிதம் அல்லது மனித வாழ்வு.

**உதிரும் இலை**

இப்போது இறந்தோரைப் பற்றிச் சிந்திப்போம். கவிஞர் வைரமுத்து உதிரும் இலை பற்றி மிக ஆழமாக எழுதுவது நமக்கு உதவியாக இருக்கலாம். உதிர்ந்து, வாடிக் கீழே விழப்போகும் இலையின் உற்சாகமான வார்த்தைகளைக் கவனிப்போம்:

**'உயிரின் கடைசி இழையில் ஊசலாடி நிற்கிறேன்.**
**உரசும் காற்று உணர்ச்சிவசப்பட்டாலோ**
**முத்து மழைத்துளியென்பது**
**மூக்கில் விழுந்தாலோ**
**என் கிளையில் ஒரு பறவை**
**சில்லென்றமர்ந்து சிறகடிக்கும் அதிர்ச்சியிலோ**
**நான் விழுந்து விடுவேன்**
**இந்தச் சாவை முன்னிட்டு**
**என்னை மன்னித்துவிட்டன**
**சக இலைகள் பிறந்த நாள் முதல்**
**பிரிந்திருந்த தாய்மண்ணை**
**முதன் முதலில் முத்தமிடப் போகிறேன்.**
**அப்படியானால் வாழ்வு குறைகுடமா?**
**சாவு நிறைகுடமா?**
**வாழ்வு தராத வரம் ஒன்றைத்**
**தாய் மண்ணே நீ வழங்க வந்தாய் எனக்கு!'**

என்று எழுதும் இக்கவிஞர் மற்றொரு நிலைக்கு நம்மை அழைத்துச் செல்கிறார்.

**இயேசுவும் கல்லறையும்**

இயேசுவின் சாவும் இந்த நிறைவை அறிவிக்கிறது. "எல்லாம் நிறைவேறிற்று" என்ற கூற்று அவரது பணியின் சாரத்தை அறிவுறுத்துகிறது. இறப்பில் பணியின் நோக்கம் வெற்றிகரமாக நிறைவு பெறுகிறது. இயேசுவின் இறப்பு நமது மீட்பாக அமைகிறது. கிறிஸ்துவில் அனைவரும் உயிர்த்தெழுவர் (1கொரி 15:22,23). இறப்பின் வழியாக நாமும் மாற்றுருப் பெறுவோம், அழியாமையையும் சாகாமையையும் அணிவோம் (1கொரி 15:52-56). இயேசுவின் சாவு சாவையும் வென்றது. பாவத்தையும் வென்றது (1கொரி 15:54-55).

எனவே, கல்லறைகள் நம்பிக்கையின் அடையாளங்கள். உயிர்த்தெழுதலை நினைவூட்டும் சின்னங்கள். நமது முன்னோர்கள் துயில்கொள்ளும் இடம்.
உறவு ஒன்றிப்புக்கான தோட்டம்.
"இறப்பு விண்ணக மாளிகையைத் திறக்கும் தங்கத் திறவுகோல்" என்று ஜான் மில்டன் கூறுகிறார்.

*சமரசம் உலாவும் இடமே!*
*பேதமில்லாமல் எல்லாரும் முடிவில் சேர்ந்திடும் காடு:*
*தொல்லையின்றியே தூங்கிடும் வீடு.*
*ஆவி போனபின் கூடிடுவார் இங்கே!*

என்ற கல்லறை குறித்த பாடல் எப்போதும் காதுகளில் ஒலிக்கட்டும்.

# இறந்தோர் நினைவாக

உங்களது உள்ளக் கதவுகளை மெல்லத் திறவுங்கள். உயிருக்கு உயிராய் உங்களோடு உறவாடி உலகை விட்டுப் பிரிந்தாலும் உள்ளத்திலிருந்து மறையாத உற்றார், உறவினர், நண்பர்களுக்காக விசேடவிதமாகச் செபிக்கும் கார்த்திகை மாதத்தில் கல்லறைகளை அலங்கரிப்பதிலேயே உங்களது பணி முடிந்துவிட்டது என்று எண்ணாதீர்கள். அன்றேல் உங்களது உறவினரோடு சேர்ந்து உண்டு உறவினர்களுக்கே தானம் செய்து பெருமையைப் பறைசாற்றுவது அவசியம் அல்ல அத்தோடு அவர்களை உதாசீனப்படுத்தி உபத்திரவப்படுத்திய தப்புக்களைச் சந்ததி தொடராமல் காத்துக்கொள்ளக் கற்றுக்கொடுங்கள்.

**ஒறுத்தல்**

உறவுகளைச் சீர்ப்படுத்தல் மன்னித்தல் இல்லாதோருக்கு உதவுதல் போன்ற நன் முயற்சிகளை முன்னெடுங்கள். அன்பைத் தேடும் இதயங்களை நாடிச் செல்லுங்கள். இதையே இறைமகன் கிறிஸ்து இயேசு அன்று கூறினார் "பசியாய் இருந்தேன். எனக்கு உண்ணக் கொடுத்தீர்கள். தாகமாய் இருந்தேன் எனக்குக் குடிக்கக் கொடுத்தீர்கள். அந்நியனாய் இருந்தேன். என்னை வரவேற்றீர்கள். ஆடையின்றி இருந்தேன். என்னை உடுத்தினீர்கள். நோயுற்று இருந்தேன். என்னைப் பார்க்க வந்தீர்கள். சிறையில் இருந்தேன். என்னைக் காண வந்தீர்கள்" (மத்.25: 35 36)

**நல்லதைச் செய்து நன்றி பகர்வோம்!**
**அருட்பணி வின்சன் பற்றிக்**

## காலம் கடந்த....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

**சமூக நீதியும் கிறிஸ்துவின் ஆட்சியும்**

கிறிஸ்துவின் ஆட்சி தனிப்பட்ட விசுவாசத்துடன் நின்றுவிடவில்லை. அது நாம் வாழும் சமுதாயம் முழுவதையும் உள்ளடக்கியது. சமூக வாழ்வில் நீதியையும் அன்பையும் நிலை நாட்டுவதே கிறிஸ்து அரசருக்கு நாம் செலுத்தும் உண்மையான அன்பின் வெளிப்பாடாகும். இதில் ஏழைகள், ஒதுக்கப்பட்டவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோரே கிறிஸ்துவின் பிரதிநிதிகள் என்பதைத் தெளிவாக உணர்த்துகிறது.

கிறிஸ்துவின் ஆட்சி வரையறை என்பது வறுமை, ஏற்றத்தாழ்வு, இன வெறி, சாதி வேறுபாடுகள், மனித உரிமை மீறல்கள் போன்ற எல்லா வகையான சமூகத் தீமைகளுக்கும் எதிரானது. கிறிஸ்துவை அரசராக ஏற்றுக்கொள்வது என்றால், உழைப்புக்குரிய கூலியை வழங்குவது. ஏழைகளுக்குச் செவிசாய்ப்பது. நேர்மையான ஆட்சிக்கு ஆதரவளிப்பது, பொது நன்மைக்காக உழைப்பது. கடவுளால் கொடுக்கப்பட்ட உலகைப் பாதுகாப்பது: அதைச் சுரண்டாமல் இருப்பது. தனிப் பட்ட வாழ்வில் கிறிஸ்து அரசர் கிறிஸ்துவை உலகத்தின் அரசர் என்று ஏற்றுக் கொள்வது எளிது. ஆனால், அவரை நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையின் அதாவது நம் மனசாட்சியின், ஆசைகளின், முடிவுகளின் அரசர் என்று அறிக்கை செய்வதுதான் மிகவும் சவாலான செயல், கிறிஸ்து அரசின் குடியுரிமை பெறுவதற்குப் பிறப்புரிமை தேவையில்லை மனமாற்றமும் சீடத்து வமும் மட்டுமே தேவை. இறுதிக் காலத்தில் கிறிஸ்துவின் அரசுகிறிஸ்து அரசர் பெருவிழா வெறும் வரலாற்றுக் கொண்டாட்டம் அல்ல அது எதிர்காலப் பார்வையை நோக்கி நம்மை நகர்த்துகிறது. கடவுளைப் புறக் கணிக்கும் மதச்சார்பற்ற உலகில், நம்பிக்கையுடன் வாழ்வும் வெறுப்பும் பகைமையும் நிறைந்த உலகில், கிறிஸ்துவின் அன்பை வழங்கவும் அநீதியும் ஒடுக்கு முறையும் உள்ள சமூகத்தில், நீதிக்காக நாம் குரல் கொடுக்கவும் வலியுறுத்துவோம்.

நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்து அரசரின் தூதுவர்களாக இருப்போம். நம்முடைய வீடுகள் அந்த அரசின் சிறிய பிரதிபலிப்புகளாக இருக்கட்டும். நம்முடைய பணியிடங்கள் அந்த அரசின் நீதியையும் நேர்மையையும் பிரதிபலிக்கட்டும். கிறிஸ்துவின் அரசு என்றென்றும் நிலைத்திருப்பதுபோல, நம் வாழ்விலும் அவர் தரும் அமைதியும் நீதியும் அன்பும் என்றென்றும் நிலைத்திருக்கட்டும்.

# அன்பு

அன்பு இருவகைப்படும். ஒன்று நிபந்தனையான அன்பு மற்றது நிபந்தனையற்ற எதிர்பாா்ப்பில்லா அன்பு. நிபந்தனையான அன்பு சுயநலம் சார்ந்தது, முறிவு ஏற்படும்பொழுது கடுங்கோபம் எழும், அடிக்கடி உறவுகளில் விரிசல் ஏற்படும், ஒருவர் ஒருவரை ஏற்றுக்கொள்ள முடியாத புரிந்துகொள்ள முடியாத நிலை தோன்றும், அமைதியற்ற நிலை அரும்பும்.

நிபந்தனையற்ற அன்பு பிறர் சார்ந்த அர்ப்பணிப்பை உள்ளடக்கியதாய் உண்மையான உவகையைத் தோற்றுவிக்கும், பிறருக்காக வாழுதல் பிறர் பரஸ்பரம் மகிழும் விதமாகச் சூழலை மாற்றி அமைத்தல் சாத்தியமாகின்றது. மகிழ்வித்து மகிழுதல், வாழ்வித்து வாழுதல், வளர்வித்து வளருதல் நிபந்தனையில்லா அன்பில் வாழ்வோருக்குக் கைவந்த கலையாகும். நிபந்தனையில்லா அன்பு, பெருமை பேசாது இறுமாப்பு அடையாது, தன்னலம் நாடாது உள்ளத்தின் நிறைவினின்று வாய்பேசும்.

எதிர்பாா்ப்பில்லா அன்பில் ஏற்றம் பெற நாம் முனைந்திடுவோம். எங்கும் எல்லோருக்கும் நன்மை செய்யும் இறைவனையே பிரதிபலித்து வாழ்வோம்.

ஏற்றத் தாழ்வில்லா வாழ்வினையே பதிவு செய்து, நாற்றம் இன்றி நாளும் இன்புறுவோம். மாற்றம் பெறுவதில் தோற்றுப் போகாது, ஏற்றம் பெற முயற்சி எடுப்போம்!
மகிழ்வோடு வாழ வாழ்த்துக்கள்!

***அன்புடன் வீ.பி***

# திருச்சபைக்கான ஒரு விழிப்பழைப்பு

எமது திரு அவையின் கண்காணும் தலைவராக வத்திக்கானில் இருக்கும் திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் அண்மையில் 'Dilexi Te' - 'நான் உன்னை நேசித்தேன்' எனும் தனது முதலாவது அப்போஸ்தலிக்க படிப்பினையை (Apostolic Exhortation), இத்தாலியிலுள்ள அசிசி நகரின் புனித பிரான்சிஸின் திருநாள் அன்று (ஐப்பசி 4ம் திகதி 2025ல்) வெளியிட்டார். இது திருத்தந்தையின் பதவிக்காலத்தில் வெளியிடப்பட்ட முதலாவது முக்கிய மடலாகும். இம்மடலின் கருப்பொருளாக: 'ஏழைகளைப் புறக்கணித்துவிட்டு எம்மால் இறைவனை நேசிப்பதாகக் கூற முடியாது' என அமைந்துள்ளது.

கத்தோலிக்கத் திருஅவையின், ஏறத்தாள 2000 ஆண்டு வரலாற்று அனுபவங்கள் மற்றும் திருவிவிலிய மேற்கோள்களை அடிப்படையாகக் கொண்டு திருத்தந்தை 14ம் லியோ அனைவருக்கும் விழிப்படைய விடுக்கும் சவால்களின் முக்கிய விடயங்களாகக் கீழ்வருவன காணப்படுகின்றன.

**துன்பம் மட்டில் எமது அலட்சியப்போக்கு.**

வறுமையை உருவாக்கும் பொருளாதார அமைப்புக்கள், தர்மம் என்பது 'விருப்பத்திற்குரியது' எனும் கருத்து, 'ஏழைகள் திரு அவையின் பொக்கிஷங்கள்' (புனித லோரன்ஸ்) என்பனவாகும்.

திருத்தந்தையின் இவ்வாவணம் வெறும் வார்த்தைகளோடு நிறுத்தப்பட அல்ல. மாறாக இதைச் செயற்படுத்த எம்மனைவருக்கும் விடுக்கும் ஒரு அவசர அழைப்பாகக் காணப்படுகின்றது.

திருத்தந்தை அவர்களினால் எழுதப்பட்டு வெளியிடப்பட்ட அவரது முதலாவது அப்போஸ்தலிக்க போதனையாக இது காணப்படுகின்றது. இம்மடலின் படிப்பினையின் மையக்கருத்தானது திருவெளிப்பாடு 3:9 இலிருந்து எடுக்கப்பட்டு அன்னை மரியாளின் புகழ்ச்சிப் பாடலுடன் (லூக்கா 1:52-53) இணைகிறது. அதேவேளை இம்மடல் இறைபதம் அடைந்த எமது முன்னைநாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் 'Dilexi Nos' எனும் இறுதி மடலின் அடிப்படையில் அமையப்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இம்மடல் திருத்தந்தை பிரான்சிஸினால் ஆரம்பிக்கப்பட்டு திருத்தந்தை லியோவினால் நிறைவு செய்யப்பட்டுள்ளது. ஆய்வாளர்கள் மற்றும் இறையியலாளர்களின் கருத்துப்படி இம்மடலானது 150 ஆண்டுகளுக்கும் மேலான கத்தோலிக்க சமூகப் படிப்பினையின் தொடர்ச்சியாக அமையப்பெற்றுள்ளது என்றால் அது மிகையாகாது.

இம்மடலின் மையக்கருத்து என்னவெனில், இறைவன் மீதான அன்புக்கும் ஏழைகள் மீதான அன்புக்கும் இடையே பிரிக்கமுடியாத பிணைப்பு உள்ளதென்பதாகும். ஏழைகளுக்குக் கொடுக்கப்படும் முன்னுரிமையானது திரு அவையின் அடையாளமாகவும் மற்றும் அதன் பணிக்கு அத்தியாவசியமானதும் என இம்மடல் வலியுறுத்துவதை அவதானிக்கலாம்.

**திருத்தந்தையின் இம்மடலில் முக்கியமாக ஐந்து அத்தியாயங்கள் உள்ளன. அவையாவன:**

- சில அத்தியாவசியமான வார்த்தைகள்
- இறைவன் ஏழைகளைத் தேர்ந்தெடுக்கிறார்.
- ஏழைகளுக்கான திரு அவை.
- தொடரும் ஒரு வரலாறு.
- ஒரு நிரந்தர சவால்.

**திருத்தந்தையின் இந்த அப்போஸ்தலிக்க மடலில் சில மேற்கோள்கள் முக்கிய இடத்தைப் பிடித்திருக்கின்றன.**

*"ஏழைகள் உங்களுடன் எப்போதும் இருப்பார்கள்" (மத். 26:11).*

*"மிகச் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவருக்கு நீங்கள் இதைச் செய்தபோது, எனக்கே செய்தீர்கள்" (மத். 25:40)*

போன்ற வாக்கியங்கள் முக்கிய இடத்தைப் பெறு-கின்ற அதேவேளை, ஏழைகளுக்காகவும் ஏழைகளுடன் இருக்க விரும்பும் ஒரு திரு அவையின் திருத்தந்தை பிரான்சிஸின் பெருவிருப்பத்தையும் இது வலியுறுத்துகின்றது. இதேவேளை இது ஏழைகளின் விசுவாசத்தின் பிரிக்க முடியாத பிணைப்பினை வலியுறுத்துகின்றது.

இம்மடலானது சில எச்சரிக்கைகளையும் விடுக்கின்றது. அவையாவன:

- அலட்சியம்
- கட்டமைப்பு வறுமைக்கான காரணங்கள்
- தூக்கியெறியும் கலாசாரம் (Throwaway culture)
- ஏழைகளைக் குறை கூறும் வழக்கம்
- தர்மத்திலிருந்து வழிபாட்டைப் பிரித்தல்
- தகுதியாட்சி (meritocracy) மூலம் துயருறுவோரை நிராகரித்தல்

இலாபம் மற்றும் ஏற்றத்தாழ்வில் மட்டுமே கவனம் செலுத்தும் பொருளாதாரத்தின் தீங்கு விளைவிக்கும் விளைவுகள் எனும் விடயங்களில் எச்சரிக்கை விடுக்கும் மடலாக அமையப்பெற்றுள்ளது.

மேலும் இம்மடலானது, நடைமுறைச் செயற்பாட்டிற்கு அழைப்புவிடுக்கின்றது. ஏழைகளுடன் தொடர்பு-பட ஏழு படிகள் வலியுறுத்தப்படுகின்றன.

ஏழைகளுடன் நேரடித் தொடர்பு கொள்தல்.

உதவி செய்வதுடன் நின்றுவிடாமல் வறுமைக்கான காரணங்களைக் கையாள்தல்.

- ஏழைகளின் குரலுக்கு செவிசாய்த்தல்.
- உடன்பயணித்தல் (accompaniment)
- தர்மம் வழங்கல்.
- நீதிக்கான அரசியல் ஈடுபாடு (political involvement for justice)

பங்கு வாழ்வில் ஏழைகளுக்கு முன்னுரிமை அளித்தல். (Making the poor central in parish life ).

திருத்தந்தை பதினான்காம் லியோவின் இந்த முதல் அப்போஸ்லிக்க ஆவணமானது இறைவார்த்தைகளடங்கிய

திருவிவிலியம் மற்றும் திரு அவையின் பாரம்பரியத்தில் வேரூன்றியிருந்த திருத்தந்தை பிரான்சிஸின் கருத்-துக்களை உள்வாங்கியும் உலகின் பொருளாதார அமைப்புக்கள் மற்றும் பிரபல சமூக அமைப்புக்களையும் குறிப்பிட்டு, சமூக மற்றும் சுற்றுச்சூழல் நீதியைத் தனிப்பட்ட மற்றும் கட்டமைப்பு அணுகுமுறைகளுடன் இணைப்பதாகவும் அமைந்துள்ளது.

இயேசுக் கிறிஸ்துவின் மீது திரு அவையின் நம்பிக்கை, ஏழைகளுக்கான மற்றும் ஏழைகளின் திரு அவையாக இருக்க வேண்டும் எனும் கோரிக்கையை முன்வைக்கின்றது. ஏழைகள் மீது கொள்ளும் அக்கறை மற்றும் உடனிருப்பானது ஏழைகள் மட்டில் இயேசுவின் அன்பைத் தெரிவிப்பதானது கிறிஸ்தவ அடையாளம் என்றும் அது அத்தியாவசிய மானது எனவும் கோடிட்டு காட்டுகின்றது.

இந்த ஆவணத்தில் ஏழைகளாக:

- பொருளற்றோர்
- சமூகப் புறக்கணிப்புக்குள்ளானோர்
- மதிப்பிழந்தோர்
- நோயுற்றோர்
- புலம்பெயர்ந்தோர்
- சிறைப்பட்டோர்
- வீடற்றோர்
- கல்வியறிவற்றோர்
- பாதிக்கப்பட்ட பெண்கள்

கலாசார மற்றும் ஆன்மீக வறுமைக்குட்பட்டோர் போன்றோர் அடையாளம் காணப்பட்டுள்ளமையும் முக்கிய அம்சமாக நோக்கப்படுகின்றது.

இறுதியாக, பல்வேறு வடிவங்களில் எம்மத்தியில் வலம்வரும் ஏழைகளுக்காக நாம் வாழ வேண்டியவர்கள், அவர்களுக்கு வாழ்வில் வசந்தத்தைக் காட்டவேண்டியவர்கள், ஏழைகள் வாழ்வு பெற அயராது உழைக்க வேண்டியவர்கள் கிறிஸ்-தவர்களாகிய நாமே, என 49 அலகுகளில் தெளிவுபடுத்தும் திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள், தீயவனுக்கு அடிபணிவோராக வாழ்வதைத்தெரிவு செய்வோமா அல்லது விடுதலை பெற்ற கடவுளின் மக்களாக வாழும் வழியைத் தெரிவு செய்வோராக எனும் சவாலுடன் திருஅவைக்கான ஓர் விழிப்பு நிலையை அடைவதற்கான ஓர் அழைப்பாக இம்மடலை நிறைவு செய்திருக்கின்றார்.

**அருட்சகோதரி. யோகராணி இராஜரட்ணம்,**
**தமிழ்ப் பிரிவு இணைப்பாளர்,**
**தேசிய மறைக்கல்வி மற்றும்**
**திருவிவிலிய நடுநிலையம்.**
**கொழும்பு 08.**

## பெற்றோரின் சிறப்பு

பத்து மாதம் வயிற்றில் தாங்கி
பக்குவமாய் நம்மை ஈன்று
பவள முத்தாய் எம்மைப் பாதுகாத்து
எம் கால் இம்மண் தொட
வரம் அளித்த வள்ளலே நம் தாய்!

பெற்ற கடன் பெற்றதோடு முடியவில்லை
நாம் பிறந்தது முதல் வளர்ந்து ஆளாகும்வரை
எம்மை நல்வழியில் நடத்தி
சோர்வுறும் நேரத்தில் நல்லதொரு நண்பனாக
துக்கவேளையில் கண்ணீர் துடைப்பவராக!

வாழ்க்கைப் பாடத்தைக் கற்றுத்தரும்
நல்ல ஆசானாக
அல்லும் பகலும் அளவின்றி உழைத்து
வியர்வைத்துளி நிலத்தின் தாகம் தீர்க்க
பாதத்தை முட்செடி முத்தமிட
நமக்காய் வாழ்கின்றவர் நம் தந்தை!

தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்
சிறு வயதிலிருந்தே நல்ல
சிந்தனைகளை நம்முன் புகுத்தி
எதிர்காலத்தில் ஒரு நல்ல மனிதனாக வாழ
மாபெரும் வரத்தை அளித்த தெய்வமே
எம் தாயும் தந்தையும்!

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
அன்பும் அரவணைப்பும்
பெற்றோரிடையே தங்கும்
கோடி கோடியாய்க் கொட்டிக் கொடுத்தாலும்
கிடைக்காதது தாயின் கருவறை
பெற்றோரை மகிழ்ச்சிப் படுத்துங்கள்
அவர்கள் நம்மோடு இருக்கும் வரை...

அ.போல் ரசின்டன்



# அகவொளி குடும்ப நலமையம்
# திருமண சேவை

## மணமகன் தேவை

| | |
|---|---|
| வயது | :- 30 |
| கல்வித்தகைமை | :- A/L |
| சமயம் | :- றோமன் கத்தோலிக்கம் |
| பிரதேச செயலகம் | :- வவுனியா |

| | |
|---|---|
| வயது | :- 38 |
| கல்வித்தகைமை | :- A/L |
| சமயம் | :- றோமன் கத்தோலிக்கம் |
| தொழில் | :- வேலணை |

| | |
|---|---|
| வயது | :- 28 |
| கல்வித்தகைமை | :- O/L |
| சமயம் | :- றோமன் கத்தோலிக்கம் |
| தொழில் | :- மெக்கானிக் |
| பிரதேச செயலகம் | :- யாழ்ப்பாணம் |

| | |
|---|---|
| வயது | : 40 |
| சமயம் | :- றோமன் கத்தோலிக்கம் |
| கல்வித்தகைமை | :- MBBS |
| தொழில் | :- Doctor |
| பிரதேச செயலகம் | :- கொழும்பு |

| | |
|---|---|
| வயது | :- 38 |
| சமயம் | :- றோமன் கத்தோலிக்கம் |
| தொழில் | :- Management Service Officer |
| பிரதேச செயலகம் | :- யாழ்ப்பாணம் |

| | |
|---|---|
| வயது | :- 28 |
| சமயம் | :- றோமன் கத்தோலிக்கம் |
| கல்வித்தகைமை | :- B.A, M.A (CMCHS) |
| தொழில் | :- Accounts Assistant (City Medical) |
| பிரதேச செயலகம் | :- சண்டிலிப்பாய் |

| | |
|---|---|
| வயது | :- 33 |
| சமயம் | :- றோமன் கத்தோலிக்கம் |
| கல்வித்தகைமை | :- MBBS |
| தொழில் | :- Doctor |
| பிரதேச செயலகம் | :- யாழ்ப்பாணம் |

| | |
|---|---|
| வயது | :- 30 |
| சமயம் | :- றோமன் கத்தோலிக்கம் |
| கல்வித்தகைமை | :- BSC, MSC |
| தொழில் | :- Cyber Securtiy CIT Engineer (டுபாய்) |
| பிரதேச செயலகம் | :- கோப்பாய் |

**இவை பற்றிய மேலதிக விபரங்களைப் பெற கீழ் உள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்.**
**அகவொளி குடும்ப நல மையம், புனித பத்திரிசியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி இலக்கங்கள் :- 077 - 904 7651, 021- 222 2656, 077- 942 2970.**

அன்பின் மகிழ்வு 38

# போதையற்ற தேசத்தை உருவாக்குவது நம் குடும்பங்களினதும் திருஅவையினதும் ஓர் புனிதப் பொறுப்பு



**1. முகவுரை**

இன்று நம் நாட்டில் போதைப் பொருள் தொடர்பான செய்திகள் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணித்தியாலத்திலும் நமது இதயத்தைக் கதிகலங்க வைக்கும் வகையில் வெளிப்படுகின்றன. இன்று போதைப் பொருள் பற்றிய செய்திகளைக் கேட்கின்ற போது "ஒரே செய்தியைத்தானா மீண்டும் கேட்கிறோம்?" என்ற ஓர் உணர்வு மனதில் தோன்றுகின்றது. போதைப் பொருள் பற்றிய ஒரு செய்தி பயங்கரமாக இருக்கின்றது என்று சிந்தித்துக் கொண்டு இருக்கும் வேளையில், அதைவிடக் கொடூரமான இன்னொரு புதிய செய்தி இந்த நாட்டில் உள்ள சமூகத் தொடர்பு சாதனங்களில் தினமும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

"இந்து மகாசமுத்திரத்தின் முத்து", "பல மதங்களின் தொட்டில்" என்று உலகமே போற்றிய எமது தேசம் இன்று போதைப் பொருளின் நிழலில் குருதி வடிந்து நிற்கிறது. இது ஒரு சமூகப் பிரச்சினை மட்டுமல்ல எம் நாட்டின் ஆன்மீக அடித்தளத்தையே சவாலாக்கும் ஒரு காலம். அண்மையில் சிறைச்சாலை ஆணையாளர் ஜகத் வீரசிங்க அளித்த தகவல் ஒன்று நமக்கு அதிர்ச்சியளிக்கிறது: அதாவது கொழும்பு மாவட்டத்திலே மட்டும் 2,30,980 மாணவர்கள் போதைப் பொருள் பாதிப்பின் இருளில் தத்தளிக்கின்றனர். ஒரே மாவட்டத்தில் இத்தனை பாடசாலை மாணவர்கள் சிக்கியிருக்கின்றார்கள் என்றால், நாடு முழுவதும் எத்தனை மாணவர்கள் சிக்கியிருப்பார்கள் என்று சிந்திக்கின்ற போது குலை நடுங்குகின்றது. எமது மறைமாவட்டமும் இதற்கு விதிவிலக்கு இல்லை. தினமும் ஆயிரக் கணக்கான கிலோ போதைப் பொருட்கள் பாதுகாப்புத் தரப்புகளால் கைப்பற்றப்படுகின்றன. அவை பிடிபடாமல் சமூகத்துக்குள் நுழைந்திருந்தால், எமது இளம் தலைமுறையின் எதிர்காலம் முழுமையாக அழிந்து போயிருக்கும். தெற்கில் தொடக்க காலத்தில் கைப்பற்றப்பட்ட பல ஆயிரம் கிலோக்கள் பற்றி ஒரு செய்தியாளர் இவ்வாறு கூறினார்: "இந்தப் பொருட்கள் எம் சமூகத்துக்குள் சென்றிருந்தால் இலங்கை என்ற நாடே இருந்திருக்காது". இந்த வார்த்தைகள் எம் மனதில் ஓர் பெரும் பீதியை ஏற்படுத்துகின்றது. எம் தேசத்தை இந்தப் பெரும் அழிவில் இருந்து காப்பாற்றியவர் யார்? என்ற கேள்வியை நாம் தினமும் கேட்க வேண்டும். அது இறைவனின் அருளேயாகும். பவுல் திருத்தூதர் தன் வாழ்வை நினைத்து இவ்வாறு சொல்கிறார்: "இந்நிலையில் நான் இருப்பது யேசுவே உன் அருளால் தான். வாழ்வது நானல்ல யேசுவே என்னில் வாழ்கின்றார்". இந்தப் பேருண்மை இன்று இலங்கையில் நியமாகின்றது. இந்த நாட்டில் அதிசயமான முறையில் உருவான புதிய அரசானது "போதையற்ற இலங்கையை" நேர்மையான முறையில் உருவாக்க முயல்வது மிகுந்த நிம்மதியை அளிக்கின்றது. போதைப் பொருட்களை நம் தேசத்துக்குள் கொண்டுவந்த கொண்டு வந்து கொண்டிருக்கின்ற பலர் கைது செய்யப்படுவது நிம்மதி தருகின்றது. ஆனால் இது அரசின் பொறுப்பு மட்டுமல்ல மாறாக இது குடும்பத்தின் புனிதப் பொறுப்பு, திருச்சபையின் நெறிப்படுத்தும் பொறுப்பு, ஒவ்வொரு கிறிஸ்தவனின் விசுவாசப் பொறுப்பு.

**2. குடும்பம்:**

முதல் திருச்சபை, முதல் பள்ளி "குடும்பம் என்பது ஒரு குட்டி வீட்டுத் திரு அவை" என்று புனித யோவான் கிறிஸ்சோஸ்தம் கூறுகிறார். மனித வாழ்க்கையின் முதல் அருளொளி மிளிரும் புனித இடம் குடும்பமே. இங்கு தான் ஒரு குழந்தை நன்மை – தீமை பற்றிய உணர்வு, மனித மாண்பு என்ற தெய்வீகப் பண்புகளைப் பெறுகின்றது. அன்பு, ஒற்றுமை, மன்னிப்புப் போன்ற நற்குணங்கள் ஆகிய வற்றை முதன் முதலில் அனுபவிக்கிறது. குழந்தையின் இவ்வாறான ஆரம்ப ஆன்மீக வளர்ச்சியைத் திருஅவை "இல்லற இறையியல் பணியாக" அழைக்கிறது. புனித திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் அவர்கள் Familiaris Consortio என்கின்ற திருமடலில் குடும்பங்கள் "மனிதனின் எதிர்காலத்தை வடிவமைக்கும் முதல் கல்விக்கூடம்" என்று வலியுறுத்துகிறார். ஒரு சமூகத்தின் உயர்வு, அதன் ஒழுக்கநெறிகள், மனித நேயம் ஆகிய அனைத்தும் வீட்டில் உருவாகும் கல்வியின் மேல் தங்கியுள்ளன. இந்தச் சூழலில், போதைப் பொருளுக்கு எதிரான போராட்டம் திருஅவையிலும், அரசியலிலும், பள்ளிகளிலும் ஆரம்பிப்பதற்கு முன்னர், அதற்கான மிக வலிமையான முதல் படி குடும்பத்தில் தான் உள்ளது. குழந்தைகளைப் பாதுகாப்பதும், வழிநடத்துவதும், நற்பண்புகளை வளப்படுத்துவதும் கடவுள் குடும்பத்துக்குக் கொடுத்துள்ள ஒரு புனிதப் பொறுப்பு. திருஅவை போதிப்பதாவது, தந்தையும் தாயும் தங்கள் பிள்ளைகளின் முதல் ஆசிரியர்களும் முதல் மதபோதகர்களும் ஆவார்கள். நல்லொழுக்கத்தை விதைப்பதும், வாழ்வின் அர்த்தத்தை உணரச் செய்வதும், சரி – பிழை என்பனவற்றைப் புரியச் செய்வதும் பெற்றோருக்கே கொடுக்கப்பட்ட தனித்துவமான அருள்பணி. இதனைத் திருஅவை "Domestic Church Ministry" என்று குறிப்பிடுகிறது. இந்த நிதர்சனத்தை முன்னிலைப்படுத்திக் கொண்டு, இன்று குடும்பங்கள் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய கேள்வி: எவ்வாறு நம் பிள்ளைகளை 'போதை' என்ற அரக்கனின் பிடியிலிருந்து காத்து, நம்பிக்கையுடன் வளப்படுத்த முடியும். இது பொதுவான பாதுகாப்புச் செயல் அல்ல. இது மனித உயிரைக் காக்கும் பணியும் ஆன்மாவைக் காத்திடும் சாட்சியமும் ஆகும். அன்பு நிறைந்த வீட்டுச் சூழலில் வாழும் குழந்தை வழிதவறுவது அரிது. கல்வியில் வளர்ச்சி, நன்னடத்தை கொண்ட நட்பு வட்டம், பெற்றோரின் அக்கறை, குடும்ப செபத்தின் வலிமை ஆகியவை போதைக்கு எதிரான மிகப் பயனுள்ள பாதுகாப்புச் சுவர் ஆகும். குடும்பம் அன்பின் உறைவிடமாகவும், உண்மையின் பள்ளியாகவும், இறைவனின் சமாதானம் நிறைந்த முதல் ஆலயமாகவும் இருந்தால், எந்தத் தீய சக்தியும் நம் இளைய தலைமுறையின் எதிர்காலத்தை சிதைக்க முடியாது.

**3. ஒவ்வொரு வீட்டையும் அன்பும் மரியாதையும் நிறைந்த ஆன்மீகச் சூழலாக்க வேண்டும்**

குடும்பத்தில் ஒரு குழந்தை "நான் ஏற்றுக் கொள்ளப்படுகிறேன்," "எனக்கு மதிப்பு உண்டு," "என் மனதில் உள்ளதை அன்போடு கேட்கிறார்கள்" என்ற அனுபவத்தைப் பெறும் போது, எந்த வெளிப்புறத் தீமையானாலும் அது எளிதில் அவர்களை உடைக்க முடியாது. அன்பு என்பது குழந்தையின் உள்ளத்தில் கடவுள் விதைத்த முதல் அருள்விதை. அந்த விதை குடும்பத்தில் பாதுகாக்கப்பட்டால், அது ஒழுக்கமும் நம்பிக்கையும் நிறைந்த ஒரு வாழ்வாக மலர்கிறது. திருஅவை போதிப்பதாவது, குடும்பம் என்பது அன்பின் கூடம். அன்பும் மரியாதையும் நிறைந்த சூழலில் வளர்கிற குழந்தை, தன்னைக் கடவுளின் உருவிலும் ஒற்றுமையிலும் படைக்கப்பட்டவராக உணரத் தொடங்குகிறார். மனித மாண்பு பற்றிய இந்த உணர்வு, அவர்களுக்கு நல்லதைத் தேர்வு செய்யும் திறனையும் தீமையைத் தள்ளி விடும் தைரியத்தையும் அளிக்கிறது. Gaudium et Spes கூறுவது போல, "மனிதன் அன்பின் மூலம் தான் தன்னை முழுமையாகக் கண்டடைகிறான்." அன்பு குறைந்த வீடு, உரையாடல் இல்லாத குடும்பம், குழந்தைகள் தங்கள் மனதைத் திறக்க முடியாத சூழல்- இவை அனைத்தும் இளைஞர்களை வெளிப்புறத் தாக்கங்களினால் பலவீனமாக்கும் நிழல்களாக முடிகின்றன. வெளியில் தவறான நட்பு, அழுத்தம், போதைப்பொருள் போன்ற தீமைகள் வலுவாக இழுக்கும் போது, இத்தகைய குடும்பப் பிளவுகள் அவர்களை எளிதில் திசைதிருப்புகின்றன. ஆனால் அன்பு நிரம்பிய குடும்பம் ஒரு குழந்தையின் உள்ளத்தில் அரணாக நிற்கும்.

மன்னிப்பு, மரியாதை, செவிமடுக்கும் உரையாடல், அனைவரையும் சேர்த்துக்கொள்ளும் குடும்ப ஆன்மீகம் இவையே ஒரு இளைஞனின் மனநலத்திற்கும் ஆன்மீக நிலைத் தன்மைக்கும் அடிப்படை. குழந்தை தன் வீட்டில் பாதுகாப்பாக இருக்கிறேன் என்று உணரும்போது, உலகின் எந்தவித அழுத்தத்தையும் எதிர்கொள்ளும் உளவளமும் தன்னம் பிக்கையும் வளர்கிறது. நம் நாட்டுச் சூழலில், பல குடும்பங்கள் சமூக அழுத்தங்களாலும் பொருளாதாரச் சுமைகளாலும் திணறிக் கொண்டிருக்கின்றன. இன்றைய சூழமைவில் குடும்ப அன்பும் உரையாடலும் இன்னும் அவசிய மானவை. பெற்றோர்கள் குழந்தைகளுடன் தினசரி சிறிய உரையாடல்களைக் கூட ஏற்படுத்தினால், அது ஒரு சக்தி வாய்ந்த ஆன்மீக அடித்தளமாக மாறுகிறது. அன்பு, மரியாதை, செபம், உண்மையான உரையாடல் கொண்ட குடும்பங்களாக இருந்தால் இதுவே போதைப் பொருளுக்கு எதிரான முதல் வெற்றி.

**2. தினசரி உரையாடல்: குடும்பத்தின் பரிசுத்தமான உறவுப் பாலம்**

ஒரு குழந்தை தனது உள்ளக் கிடக்கைகளைப் பகிர யாரும் கிடைக்காமல் தனிமையில் தவிக்கும்போது, அதன் மனம் வெளியே சென்று, "யாராவது எனக்கு செவிமடுப்பார்களா? யாராவது என்னைப் புரிந்து கொள்வார்களா?" என்று ஏங்கி நிற்கும். அந்தத் தேடலில் நல்ல மனிதர்களையும் சந்திக்கலாம் அதே நேரம் தவறான பாதைகளில் அழைத்துச் செல்லும் மனிதர்களையும் சந்திக்கலாம். எனவே, குழந்தைகளின் மனதிற்குள் நுழைந்து அவர்களைப் புரிந்து கொள்ளும் முதல் பணி குடும்பத்துக்கே உரித்தானது. குடும்பமே "அன்பின் பள்ளிக்கூடமும் மனிதனின் முதல் உரையாடல் தளமும்" என்று திருஅவை கூறுகின்றது. உரையாடல் என்பது வெறும் கேள்விகளும் பதில்களும் அல்ல. இது குழந்தையின் உள்ளத்தைத் திறக்க வைக்கும் ஒரு புனித பாலமாகும். இந்தப் பாலத்தின் வழியாகப் பெற் றோரும் பிள்ளையும் ஒருவருக்கொருவர் அருளையும் அன்பையும் பகிர்ந்து கொள்கிறார்கள். அதனால் தினமும் பிள்ளைகளிடம் அன்போடு கேட்க வேண்டும்: "இன்று என்ன கற்றாய்?" "யார் உன்னுடன் விளையாடினார்கள்?" "இன்று உன்னை ஏதாவது வருத்தியதா?" "உன் மனதில் சொல்ல வேண்டும் என்று தோன்றும் ஏதேனும் விஷயம் இருக்கிறதா?" இத்தகைய எளிய கேள்விகள் தான் குழந்தையின் உள்ளத்தில் மிகப் பெரிய செயற்பாட்டை ஏற்படுத்துகின்றது. இவை அவர்களின் மனநலத்தையும் நம்பிக்கையையும் வலுப்படுத்தும் ஆன்மீக மருந்துகள். அன்போடு கேட்பதும், பொறுமையுடன் கேட்டுக் கற்பிப்பதும், குழந்தையின் உள்ளத்தில் ஒரு பாதுகாப்பான அரணாக மாறுகிறது. அவர்கள் அனுபவிக்கும் அச்சம், குழப்பம், மகிழ்ச்சி, தோல்வி, வெற்றி - இவை அனைத் தையும் பகிர ஒரு நம்பிக்கைக்குரிய முகங்களாகப் பெற் றோர் தோன்றும் போது, தவறான பாதைகளின் குரல்கள் அவர்களை ஈர்க்க முடியாது. பெற்றோர்கள் பிள்ளைகள் சொல்வதைக் கேட்பது ஒரு நற்பண்பு மட்டுமல்ல அது ஒரு கிறிஸ்தவ சேவை. கேட்பதன் வழியே பெற்றோர், தங்கள் பிள்ளைகளுக்குக் கிறிஸ்துவின் அன்பின் நிழலாக மாறுகிறார்கள்.

**4. திருஅவை வாழ்க்கையைக் குடும்பத்தின் மையக் கலாசாரமாக மாற்றுங்கள்**

குடும்பத்தில் கிறிஸ்தவ வாழ்க்கை மையமாக இருந்தால், அந்தக் குடும்பம் ஒரு வீட்டுத் திருஅவையாக மாறுகிறது. திருப்பலியில் பங்கேற்பதும், குடும்பமாக ஒன்றிணைந்து செபிப்பதும், பங்கு இளையோர் மன்றம், குடும்ப இயக்கங்களின் செயற்பாடுகள் போன்றவை அனைத்தும் குழந்தைகளின் விசுவாச வளர்ச்சிக்குத் தேவையான தெய்வீகச் சூழலை உருவாக்குகின்றன. இத்தகைய ஆன்மீகச் சூழல், பிள்ளைகளின் உள்ளத்தில்

அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்
அகவொளி குடும்ப நல மையம்




# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா**

*(விஜிதா, மட்டக்களப்பு)*

**கேள்வி: அம்பாறை மாவட்டத்தில் மாடுகளுக்கான மேய்ச்சல் தரவை நிலப்பிரச்சினை மிக மோசமான கட்டத்தை அடைந்திருக்கின்றது. சுமார் 30 எருமை மாடுகளுக்கு வாளால் வெட்டியிருக்கின்றார்கள் என்ற செய்தி மிகவும் கவலையளிக்கின்றது. இவர்கள் என்ன மிருகங்களா?**

**பதில்:** ராணி, இப்பேர்ப்பட்டவர்களை மிருகங்கள் என்று சொன்னால் மிருகங்களின் மதிப்பைக் குறைத்து மதிப்பிடுவது போலாகிவிடும்! ஏனென்றால், மிருகங்கள் அப்படிச் செய்வதில்லை! ஏன் இவ்வளவிற்குக் கீழிறங்கி விட்டோம் என்பதை அவசரமாகக் கூடிச் சிந்திக்க வேண்டிய விடயம்! அரசு தலை யிட வேண்டும்.

*(விஜயன், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் முப்பொன் விழா சிறப்பாக நடந்தேறியுள்ளது. அவர் ஆற்றிய பணிகளை இன்றைய தலைமுறை அறிந்திருக்கிறதா?**

**பதில்:** இன்றைய தலைமுறை அறியவில்லை என்பது தான் என்னுடைய அவதானிப்பு! ஆயினும், அறிந்த பழைய தலைமுறை தான் அறிந்தவற்றை இன்றைய தலைமுறைக்குக் கடத்தவில்லை என்பதுதான் கவலை. அத்துடன், எம் மண்ணில் தோன்றிய இப்பெரும் பேரறிஞரின் பங்களிப்பை சரியாக முன்நிலைப்படுத்தாததும் இத்தலைமுறை அடிகளாரின் பணிகளைப் பற்றி அறியாததற்குக் காரணமாகும்.

*(அன்பரசி : மாதகல்)*

**கேள்வி: குறை சொல்பவர்கள் பற்றிய உங்கள் கருத்தென்ன?**

**பதில்:** 'குறை சொல்பவர்களின் வாயில் சீமெந்து வைத்து அடைத்தாலும் அந்தச் சீமெந்து சரியில்லையென்று குறைசொல்வார்கள்! அதனால் எவரைப் பற்றியும் கவலைப் படக் கூடாது!' என்று ஒருவர் குறிப்பிட்டதை அண்மை யில் காணொளி ஒன்றில் பார்த்தேன். கொஞ்சம் உளப் பாதிப்புகள் அடைந்தவராக இருக்கலாம்! அப்படிப்பட்டவர்கள் நல்ல உளவளத் துணையாளரைச் சந்தித்து உளவளத் துணை பெறுவது நல்லது மட்டுமல்ல அவசியமானதும்கூட!

*(ஆனந்தன், கிளிநொச்சி)*

**கேள்வி: முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் அரசியலுக்கு, அதாவது மாகாண சபைத் தேர்தல் நடந்தால் வடமாகாண முதல் அமைச்சர் பதவிக்குப் போட்டியிடுவாரா?**

**பதில்:** 'யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே' என்றொரு பழமொழி உண்டு. இதுபோல சில விடயங்கள் நடந்து வருவதைப் பார்த்தால் சாதகமான சமிக்ஞைகளே தெரிகின்றன. எனினும், "வருவார் ஆனால் வரமாட்டார்!" என்று அவரே பிரான்சில் ஒரு மதிப்பளிப்பு நிகழ்வில் குறிப்பிட்டிருக்கிறார். நான் நினைக்கிறேன், 'வரமாட்டார் ஆனால் வருவார்!' என்பது போலத்தான் எனக்குப் படுகிறது. அவர் அரசியலுக்கு வருவதை ஒருசாரார் விரும்பாத நிலையில் கணிசமான மக்கள் தொகையினர் விரும்புகிறார்கள். காரணம் அவர் நீதிபதியாக இருந்த போது மிகவும் நேர்மையோடு தமது பணிகளை ஆற்றியிருந்தனால் ஆகும். எனினும் முன்னாள் நீதியரசர் ஒருவர் முதலமைச்சராக இருந்து செய்த சாகசங்களோடு வைத்து இவரையும் பார்க்கிறார்கள். அத்துடன் மா. இளஞ்செழியன் பதவி உயர்வு கிடைத்திருந்தால் இந்தப் பக்கத்தினை ஏன் என்றும் திரும்பிக்கூடப் பார்த் திருக்க மாட்டார்! இது ஒருபுறம் இருக்க, அரசியலில் எப்படி மா. இளஞ்செழியன் பிரகாசிப்பார் என்பதைச் சிலர் கேள்வியோடுதான் நோக்குகிறார்கள். அதேவேளை, முதலமைச்சர் பதவிக்கு இங்கு உருப்படியாக வேறு யார் தான் இருக்கிறார்கள் என்ற கேள்வியும் இருக்கிறது!

*(விஜி, யாழ்ப்பாணம்)*

**கேள்வி: பிள்ளைகள் நல்ல பிள்ளைகளாகத்தான் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் பழகும் நண்பர்களின் பழக்கங்கள் சிலவேளைகளில் பிழையானவையாக இருப்பதால் அவர்கள் பிழையான வழிகளில் செல்லக் காரணமாக இருக்கிறது! இது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**பதில்:** ஒரு உளவியல் நிபுணர் ஒரு சிம்பன்சி குரங்கொன்றைத் தன் மகனுடன் சேர்த்து வளர்த்தார். நோக்கம், மகனிடமிருந்து குரங்கு கற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகும். ஆனால், நாளடைவில், குரங்கு மகனிடமிருந்து கற்றுக் கொள்ளவில்லை. மகன்தான் குரங்குபோல நடக்கத் தொடங்கினான். முடிவு: கண்ட கண்ட குரங்குகளோடு பழகினால் குரங்குக் குணம்தான் மனிதரில் தொற்றிக் கொள்ளும்!

*(றமேஷ், மன்னார்)*

**கேள்வி: மற்றவர்களைக் குறித்து, ஏன், சில படித்தவர்களும், சமூக சமயப் பணியாளர்களும் வேண்டுமென்றே அவதூறு பரப்புபவர்களாக இருக்கிறார்கள். பிரச்சினை எங்கே இருக்கிறது?**

**பதில்:** மனநலனில் இருக்கிறது! மனநலன் பாதிக்கப்பட்டால் அடுத்தவர் பற்றிப் படுமோசமாகத்தான் கதைப்பார்கள்!

(அன்ரன், யாழ்ப்பாணம்)

**கேள்வி: முகநூலில் நீங்கள் அரிய பல விடயங்களைப் பற்றியெல்லாம் எழுதுகிறீர்கள்! இவற்றை வாசித்தாலே பலருக்குக் கொஞ்சமாவது அறிவு பிறக்கும்! இவற்றை வாசித்து நடப்பார்கள் என்று கருதுகிறீர்களா?**

**பதில்:** 'கேட்கச் செவியுடையோர் கேட்கட்டும்' ராணி. சொல்லிக் கொண்டிருப்பது? அறிவித்துக் கொண்டிருப்பது நமது பணி. அதனை மனந்தளராமல் செய்வோம். அறுவடையை அவன் பார்த்துக்கொள்வான்.


## என்றும் எங்கள் நினைவுகளில்

மண்ணில்
17
.
07
.
2010



விண்ணில்
19
.
11
.
2019

**அமரர் பென்சித் றஜாந்தி சிறிசுதாகரன்**

அவர் என் கால்களை மான்களின்
கால்களைப் போல் ஆக்குகின்றார்
உயர்ந்த இடத்தில் என்னை
நிலை நிறுத்துகின்றார்.
(தி.பா.19:33)

100, பழைய பூங்கா வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

AD-113

பாசமுடன் நினைவுகூரும்
குடும்பத்தினர்


# உரோமைத் தலைமைச் செயலகத்தின் புதிய விதிமுறைகள்!

வத்திக்கான் நிறுவனங்களின் நிர்வாகத்தைப் புதுப்பித்து, உரோமைத் தலைமைச் செயலகத்தின் புதிய விதிமுறைகளையும் அதனுடன் இணைந்த பணியாளர் ஒழுங்குமுறையையும் அங்கீகரித்து வெளியிட்டுள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

கடந்த 23ம் திகதி கிறிஸ்து அரசர் பெருவிழாவாகிய இன்று கையொப்பமிடப்பட்டு புதிய விதிமுறைகள், வத்திக்கான் தலைமைச் செயலகம், திருப்பீடத் துறைகள், நீதித்துறை மற்றும் பொருளாதார அமைப்புகள் மற்றும் இது தொடர்புடைய நிறுவனங்களுக்குப் பொருந்தும் என்றும் கூறப்பட்டுள்ளது.

திருத்தந்தையின் இப்புதிய அறிவிப்பு பணியாளர் ஒழுங்குமுறை, உரோமைத் தலைமைச் செயலகத்தின் ஊழியர்களுக்கான நிறுவன, ஒழுங்குமுறை மற்றும் பொருளாதார விடயங்களுக்கான விதிகளை அமைக்கிறது.

மேலும் இந்தப் புதிய விதிகள், திருத்தந்தை இரண்டாம் ஜான் பால் அவர்களால் 1999 -ஆம் ஆண்டு விதிக்கப்பட்ட விதிமுறைகளை மாற்றியமைத்து, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் 2022-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட "பிரதிகாத்தே எவாஞ்செலியும்" (Praedicate Evangelium) அப்போஸ்தலிக்க ஆவணத்திலிருந்து சீர்திருத்தங்களை உள்ளடக்கியுள்ளன.


## பரிசுத்த ஆவிக்குச் செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழி காட்டும் பரிசுத்த ஆவியே, உமது திருநாமம் அர்ச்சிக்கப் படுவதாக, உமது அருட்கொடைகளின் மூலம் என் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள்புரிபவரே,
என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்றதுணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன்.

என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகின்றேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகிறேன்.

(உங்கள் தேவை எவ்வளவு கடினமாய் இருப்பினும் அடுத்த 3 நாட்களுக்கு இச் செபத்தை உங்கள் தேவையைக் கேளாமல் சொல்லிவரின் உங்கள் தேவை நிறை வேறும். இச் செபத்தைப் பிரசுரிப்பதாக வாக்குப் பண்ணவும்)

(AD- 114 ) - ஓர் அடியாள்.


# மறைப்பணி புரிந்த மாமேதை நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்



சுவாமி ஞானப்பிரகாசர் சமஸ்கிருதம், ஆங்கிலம், தெலுங்கு மலையாளம், கன்னடம், இத்தாலி, பிரெஞ்சு, இலத்தீன், சிங்களம் ஆகிய மொழிகளில் எழுதப் பேசத் தெரிந்தவர்.
சமஸ்கிருதம் மூலம் பிற ஆரிய மொழிகளை அறிந்து கொண்ட வர். சிங்களத்தின் வழியாகப் பாளி மொழியையும் திபெத், பர்மிய கூர்க்க மொழிகளையும் தெரிந்து கொண்டவர்.
எபிரேயம், கிரேக்கம், டச்சு, ஜேர்மன், போர்த்துக்கீசம் போன்ற எழுபது (70) மொழிகளை அறிந்திருந்தார் என்றால் கேட்பதற்கு வியப்பாகவும், விசித்திரமாகவும் இருக்கும். இத்தனை மொழிகளையும் தெரிந்து கொள்வது சாத்தியமாகுமா? என எண்ணத் தோன்றும்.

இது சாத்தியமாகும் என்பதற்குச் சுவாமி அவர்கள் மொழியாக் கத் துறையில் புரிந்த தனிப் பெரும் சாதனையான "சொற்பிறப்பு ஒப்பியல் தமிழ் அகராதி" சான்று பகரும்.

பல்கலைக் கழகங்கள் ஆற்ற வேண்டிய பாரிய பணியினை சுவாமி ஞானப்பிரகாசர் தனி மனிதனாக நின்று நிறைவேற்றினார்.

அறிஞர் குழாம் கூடி, கூட்டம் போட்டு, மாநாட்டை வைத்துச் செய்ய வேண்டிய தமிழ்ப் பணியை தானே தனியொருவனாய் முன்னெடுத்தார்.

பொது நிறுவனம் ஒன்றினாலே "கொமிக்ஷன் அமைத்து, திட்டமிட்டு, நிதி ஒதுக்கப்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய மாபெரும் திட்டத்தை ஒருசில நண்பர்கள், நலன் விரும்பிகளின் உதவியோடு செய்திருக்கின்றார்.

ஏறக்குறைய எழுபது (70) மொழிகளைக் கற்று, பதினெட்டு (18) வகையான சான்றுகளைக் காட்டி, மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி தமிழ் மொழியே என்று நிறுவுகின்றார்.

**அருட்பணி செ. அன்புராசா**

## யாழ். மறைமாவட்டக் குருக்களுக்கான வருடாந்தத் தியானம்



யாழ். மறைமாவட்டக் குருக்களுக்கான வருடாந்த த்தியானம் இரண்டு பிரிவுகளாக முன்னெடுக்கப்பட்ட நிலையில் இரண்டாம் குழுவினருக்கான தியானம் கடந்த 17ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி வரை பண்டத்தரிப்பு புனித பற்றிமா அன்னை தியான இல்லத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு மறைமாவட்டத்தைச் சேர்ந்த இயேசு சபை அருட்தந்தை யூட் டிலக்ஸன் அவர்கள் நெறிப்படுத்திய இத்தியானத்தில் தியான உரைகள், சிறப்பு நற்கருணை ஆராதனைகள், திருப்பலிகள் என்பன இடம்பெற்றன. இத்தியானத்தில் 60 வரையான குருக்கள் பங்குபற்றியிருந்தனர்.

## மல்வம் திருக்குடும்ப ஆலயப் பிள்ளைகளுக்கான முதல்நன்மை



மல்வம் திருக்குடும்ப ஆலயப்பிள்ளைகளுக்கான முதல்நன்மை அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்தந்தை அருட்செல்வன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 16ஆம் திகதி நடைபெற்றது. குருநகர் உதவிப் பங்குத் தந்தை அருட்தந்தை கிறிஸ்ரி ஞானராஜ் றொகான் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற திருப்பலியில் 14 சிறார்கள் முதல்நன்மை அருட்சாதனத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

## நெடுந்தீவுப் பங்கில் பாடகர் குழாமின் பாதுகாவலி புனித சிசிலியாவுக்குத் திருவிழா



நெடுந்தீவுப் பங்கு ஆலயங்களின் பாடகர் குழாமினர் இணைந்து முன்னெடுத்த பாடகர் குழாமினரின் பாதுகாவலி புனித சிசிலியா திருவிழா கடந்த 22ஆம் திகதி புனித மரியன்னை ஆலயத்தில் நடைபெற்றது. திருப்பலியை பங்குத்தந்தை அருட்தந்தை பத்திநாதன் அவர்கள் தலைமைதாங்கி ஒப்புக் கொடுத்தார்.

## இறைபதமடைந்த ஆயர்கள், குருக்கள், துறவிகளை நினைவுகூர்ந்து சிறப்புத்திருப்பலி



யாழ். மறைமாவட்டத்தில் பணியாற்றி இறைபதமடைந்த ஆயர்கள், குருக்கள், துறவிகளை நினைவுகூர்ந்து முன்னெடுக்கப்பட்ட சிறப்புத்திருப்பலி கார்த்திகை 10ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது. யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்ற இத்திருப்பலியில் குருக்கள், துறவிகள், அருட்சகோதரர்கள், குருமட மாணவர்கள், இறைமக்களென ப்பலரும் கலந்து செபித்தனர்.

## புனித வின்செண்டி போல் சபையில் பணியாற்றி இறைபதமடைந்தவர்களை நினைவுகூர்ந்து திருப்பலி

புனித வின்செண்டி போல் சபையில் பணியாற்றி இறைபதமடைந்த ஆயர்கள், ஆன்மீக குருக்கள், பந்தி அங்கத்தவர்கள், மகிமை அங்கத்தவர்கள் மற்றும் உபகாரிகளை நினைவுகூர்ந்து ஒப்புக்கொடுக்கப்பட்ட திருப்பலி கடந்த 22ஆம் திகதி குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் நடைபெற்றது. ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை நேசநாயகம் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற திருப்பலியை கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர் அருட்தந்தை தேவராஜா ரவிராஜ் அவர்கள் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். திருப்பலி நிறைவில் சபையின் மாதாந்தக் கூட்டம் இடம்பெற்றதுடன் இக்கூட்டத்தில் புலமைப்பரிசில் பெறும் மாணவர்களுக்கு ஊக்குவிப்பு தொகையும் பந்திகளால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு நுளம்பு வலைகளும் வழங்கிவைக்கப்பட்டன. திருப்பலியில் மத்திய சபை உறுப்பினர்கள், பந்நி உறுப்பினர்களென பலரும் கலந்துசெபித்தனர்.

## யாழ். மறைக்கோட்ட பீட பணியாளர்களுக்கான சிறப்பு ஒன்றுகூடல்



யாழ். மறைக்கோட்டப் பங்குகளில் பணியாற்றும் பீடப் பணியாளர்களை இணைத்து முன்னெடுக்கப்பட்ட சிறப்பு ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த 11ஆம் திகதி யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்றது. பேராலய உதவிப் பங்குத்தந்தை கிளறேசியன் சபை அருட்தந்தை இதயராஜ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் மறைகோட்ட முதல்வர் அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பேராலய மண்டபத்தில் பீடப்பணியாளர்களுக்கான ஒன்றுகூடலும் தொடர்ந்து பேராலயத்தில் திருப்பலியும் நடைபெற்றன. திருப்பலியை கிளறேசியன் சபை அருட்தந்தை றொனால்ட் சுஜீவன் அவர்கள் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார். ஒன்றுகூடல் நிகழ்வில் அருட்தந்தை றொனால்ட் சுஜீவன், அருட்தந்தை இதயராஜ், மற்றும் குருநகர் உதவிப் பங்குத்தந்தை அருட்தந்தை கிறிஸ்ரி ஞானராஜ் றொகான் ஆகியோரால் கருத்துரைகள் வழங்க ப்பட்டதுடன் குழுச்செயற்பாடுகள், திருப்பலி உதவுமுறை பற்றிய விளக்கவுரைகள், என்பனவும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்கள் கலந்து சிறப்பித்ததுடன் 150ற்கும் அதிகமான பீடப்பணியாளர்கள் பங்குபற்றிப் பயனடைந்தனர்.

## இறையடியார் தோமஸ் அடிகளாரின் நினைவுத்திருப்பலி



செபமாலைத்தாசர் சபை ஸ்தாபகர் அமலமரித்தியாகிகள் சபை அருட்தந்தை இறையடியார் தோமஸ் அடிகளாரின் நினைவுத்திருப்பலி யாழ். மறைமாவட்டத்தின் அனைத்து ஆலயங்களிலும் கடந்த 09ஆம் திகதி முன்னெடுக்கப்பட்டது. மறைமாவட்டங்களின் இறையடியார்கள் இலத்தரன் பேராலய நேர்ந்தளிப்பு தினத்தில் சிறப்பாக நினைவுகூரப்படவெண்டுமென்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அன்றைய தினம் இறையடியார் தோமஸ் அடிகளாரின் சிறப்புத் திருப்பலி யாழ். புனித மரியன்னை பேராலயத்திலும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியை யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்கள் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். 1886ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் பாண்டியன்தாழ்வில் பிறந்த இறையடியார் தோமஸ் அவர்கள் 1904ஆம் ஆண்டு குருமடத்தில் இணைந்து 1912ஆம் ஆண்டு அமலமரித்தியாகிகள் சபைக் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். தொடர்ந்து யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியப்பணியாற்றி வந்த இவர் ஆயர் பேரருட்தந்தை கியோமர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 1928 மாசி மாதம் 02ஆம் திகதி செபமாலைத்தாசர் சபையை உருவாக்கியதோடு 1948ஆம் ஆண்டு கன்னியர்களுக்கான சபையையும் உருவா க்கினார். 1964ஆம் ஆண்டு தை மாதம் 26ஆம் திகதி இறைவனடி சேர்ந்த தோமஸ் அடிகளார் 2006ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 03ஆம் திகதி இறையடியார் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

## யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் 150ஆவது ஆண்டு விழா



யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் 150ஆவது ஆண்டு விழாவின் தொடக்க நிகழ்வு 04.11.2025 அன்று பழைய மாணவர் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டது. அதிபர் கு.லெனின்குமார் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வின் முதல் நிகழ்வு யாழ் மரியன்னை பேராலயத்தில் கூட்டுத் திரப்பலியுடன் ஆரம்பமானது. கூட்டுத் திருப்பலியைப் பாடசாலையின் பழைய மாணவர்களாக அருட்தந்தையர்கள் அருட்பணி A.S.அருள்ராஜா (கிளறேசியன் சபை), அருட்பணி பேடினட் (செபமாலை தாசர் சபை), அருட்பணி டிலோஜன் (அமதி) ஆகியோர் ஒப்புக்கொடுத்தனர்.

தொடர்ந்து பாடசாலை மண்டபத்தில் கலை நிகழ்வுகளும், பழைய மாணவர் சங்கத்தினால் 150 வது நினைவு சின்னம் வெளியிடப்பட்டது. இந்நிகழ்வில் பாடசாலையின் பழைய மாணவியும், யாழ். மாவட்ட செயலக பிரதம நிர்வாக உத்தியோகத்தர் திருமதி மேரி யமுனா சக்திஜீபன் அவர்கள் கலந்து சிறப்பித்ததோடு, ஓய்வு நிலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வைப் பழைய மாணவர் சங்கம் மிகவும் சிறப்புடன் ஒழுங்குபடுத்தினர்.

## யாழ். கரித்தாஸ் கியூடெக் நிறுவன சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வு



யாழ். கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்ட சிறுவர் மற்றும் முதியோர் தின நிகழ்வு கடந்த 08 ஆம் திகதி பருத்தித்துறைப் பங்கில் நடைபெற்றது. நிறுவன இயக்குநர் அருட்தந்தை அன்ரோ டெனிசியஸ் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் ஆரம்பத்தில் சிறுவர்கள் தும்பளை மரியன்னை ஆலயத்திலிருந்து தும்பளை புனித லூர்து அன்னை கெபிக்கு நடைபவனிசென்று அங்கு நடைபெற்ற சிறுவர் மற்றும் முதியோருக்கான விளையாட்டுக்களில் பங்குபற்றினர். விளையாட்டுக்களை திரு. பாஸ்கரன், திரு. யோசப்பாலா, திருத்தொண்டர் ஜோன் கில்டன், திரு. இயூஜின், திரு. நீலாம்பரன் ஆகியோர் இணைந்து நெறிப்படுத்தினர். தொடர்ந்து சிறார்களால் முதியோர் கௌரவிக்கப்பட்டதுடன் சிறார்கள் மற்றும் முதியோருக்கான அன்பளிப்புக்களும் வழங்கிவைக்கப்பட்டன. பருத்தித்துறை பங்குத்தந்தையும் மறைக்கோட்ட முதல்வருமான அருட்தந்தை கிருபாகரன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில் 200ற்கும் அதிகமானவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

## யாழ். மறைமாவட்ட மறைநதி கத்தோலிக்க ஊடக மைய தனி கரோல் பாடல் போட்டி




கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு யாழ். மறைமாவட்ட மறைநதி கத்தோலிக்க ஊடக மையத்தின் ஏற்பாட்டில் இவ்வருடமும் தனி கரோல் பாடல் போட்டி நடாத்த ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சமூக வலைத்தளம் ஊடாக நடாத்தப்படும் இப்போட்டியில் வயது வேறுபாடின்றி விரும்பியவர்கள் பங்குபற்றமுடியும். பங்குபற்றுபவர்கள் 2.30 நிமிடங்கள் உள்ளடங்கலாக பாடலை பாடும்போது பக்கவாத்தியங்களை தவிர்த்து கையடக்க தொலைபேசியில் வீடியோப் பதிவு செய்து பெயர், வயது, பங்கு போன்ற விபரங்கள் உள்ளடங்கலாக 074 162 6719 என்ற இலக்க WhatsApp செயலியூடாக மார்கழி மாதம் 04ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும். போட்டியாளர்களின் வீடியோக்கள் யாழ் மறை அலை தொலைக்காட்சியின் Marai Alai Media You tube தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு நடுவர்களின் தீர்ப்போடு பார்வையாளர்களின் கருத்து, எண்ணிக்கைக்கு ஏற்ப வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2025ம் ஆண்டு கார்த்திகை மாதம் 23ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.